REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 125
இதழ் 11
1 புரட்டாதி 2001
பக்கங்கள் 8
விலை ரூ. 5

# தனிப்பட்ட நலனுக்காக அன்றி நாட்டு நலனுக்காக அரசியல் யாப்பை மாற்றியமைக்க முன்வருக

## இன்றைய நெருக்கடியான சூழமையில் தேசிய ஒப்புரவு மகாநாட்டில் பேராயர் நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை

''எமது நாடு ஒரு பெரும் நெருக்கடியில் உள்ளது என்பதை இலங்கையிலுள்ள அனைவரும் உணர்ந்திருக்கின்றனர்'' கடந்த ஆகஸ்ட் 3ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டின்போது பேராயர் மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு கூறினார்.

மேலும் ''இன்று நாடு பொருளாதாரப் பிரச்சினை, இனப் பிரச்சினை, ஒழுக்கப் பிரச்சினை என்னும் வேறு பல பிரச்சினையால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். மக்கள் சக்தியின் இருப்பிடமான பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு, அதன் குரல் அமுக்கப்பட்டுள்ளது. இப்போது சர்வசன வாக்கெடுப்பு என்னும் நெருக்கடி அது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால் மக்கள் அதைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்'' என்று கூறிய பேராயர் மேலும் கூறியதாவது:

''இதில் அடிப்படையானதும் மிக முக்கியமானதுமான முன்நிபந்தனை என்னவென்றால், தனிப்பட்ட கட்சிகளின் குறுகிய நலனுக்காக அன்றி நாட்டின், நலனுக்காகப் போராடும் குழுக்களின் அரசியல் பிரிவுகள் உட்பட, சகல அரசியல் கட்சிகளும் உரையாடல், விட்டுக்கொடுத்தல், தீர்மானங்கள் ஆகியவற்றின் மூலம் அரசியல் யாப்பை மாற்றியமைக்க திறந்த மனதுடன் முன்வரவேண்டும்'' என்பதே.

''அரசியல் கட்சிகள் ஒன்றையொன்று அழிக்க முற்படாமல் நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க முயலவேண்டும். புதிய யாப்பு வரையப்பட்டு அதன் கீழ் தேர்தல் நடைபெறும்வரை, மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளில் நம்பிக்கை வைத்து அவர்களுக்குத் துணைபுரிய வேண்டும்.

முன்னைய முறைகளிலிருந்து நல்லவற்றை எடுப்பதன் மூலம் கட்சிப் பூசல்களைத் தவிர்க்கவும், சிறுபான்மையினரோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் புதிய யாப்பு வழிசெய்யவேண்டும்''.

புதிய யாப்பு ஒரு நிலையான அரசை ஏற்படுத்துவதாகவும், சகல குடிமக்களுக்கும் நீதியும் சமத்துவமும் வழங்குவதாகவும்


(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## சர்வசன வாக்கெடுப்பு அவசியமற்றது

''இந்த அவசர நிலையில் மிகத் தேவைப்படுவது அரசும் எதிர்க்கட்சியும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இடையூறாக இருக்கும் முரணி நிற்கும் அரசியலை ஒதுக்கிவிட்டு ஒத்துழைப்புக்கு ஒரு வழிதேடுவதாகும்'' இவ்வாறு நீர்கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஆகஸ்ட் 7ம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் குருமுதல்வர் அருள்திரு ஜோ. விக்கிரமசிங்க கூறினார். நல்லறிவுடைய மக்களெல்லாம் சர்வசன வாக்கெடுப்பின் நோக்கத்தைப் பற்றிக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்றும், பாராளுமன்ற முறையிலேயே அரசியல் ஒத்துழைப்புக்கான வழி காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மகா சங்கத்தின் பிரதிநிதிகளும், ஏனைய சமயங்களின் பிரதிநிதிகளும் ஏராளமாக அக்கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர்.

## கிறிஸ்தவ விவகார அமைச்சர்



கிறிஸ்தவ விவகார அமைச்சராகப் பதவியேற்ற கௌரவ அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை பேராயர் மேதகு நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ ஆண்டகை, ஆயர் மேதகு மாறியஸ் பீரிஸ் ஆண்டகை ஆகியோரைச் சந்தித்து தமது வணக்கத்தைத் தெரிவித்தார்.

## யாழ். மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர் கருத்தரங்கு

கடந்த வாரம் யாழ். மறைமாவட்டத்திலுள்ள மறைக் கோட்டங்களில் அன்பிய ஊக்குவிப்பாளருக்கான விசேட கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டது. இக் கருத்தரங்கில் அன்பிய தேசீய ரீதியில் பணியாற்றும் அருள்திரு றொகான் (கிளரீசியன்ஸ் சபை) கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கு இளவாலை மறைக்கோட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயப் பணிமனையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் 37 ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொண்டார்கள். பருத்தித்துறை மறைக்கோட்டத்திற்கான கருத்தரங்கு புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் 95 ஊக்குவிப்பாளர்கள் பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் இருந்து கலந்துகொண்டார்கள். இன்னும் தங்கள் பங்குகளில் தற்போது அன்பிய நிலைமை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

யாழ். மறைக்கோட்டத்திற்கான இந்நிகழ்வு யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு 55 ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொண்டார்கள்.

அனைத்து கோட்டத்திலும்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியரின் புதிய மாகாண முதல்வர்

அண்மையில் அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபையின் மாகாண முதல்வருக்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது அருள்சகோதரி ஆ. சுனித்தா அ. கா. மாகாண முதல்வராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆலோசகர்களாக அருள் சகோதரிகளான ஆ. சிந்தியா, மாறி லூட்ஸ், நெலி ஹெலன், ஆ. பிறைஸ் ஆகியோரும் மாகாண பொருளாராக அருள் சகோர்தரி ஆ. அடெலினாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அருட்சகோதரி மரிய டிலக்டா அ.கா. கடந்த 6 வருடங்களாக மாகாண முதல்வராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "விசுவாச உறுதியினால் செபவாழ்வில் இறைவனைக் காணும் பேறுபெற்றாள்"

மன்னார் ஆயர்

மன்னார் மறைமாவட்டத்தில் வங்காலைப் பங்கிலே அமைந்துள்ள புனித ஆனாள் ஆலயப் பெருவிழா 26.07.2001 வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 17.07.2001ல் கொடியேற்றப்பட்டு நவ நாட்கள் ஆரம்பிக்கப்பட்டன. அமலமரித் தியாகிகள் ஜெறோம் லம்பேட் அடிகளால் நவ்நாட் தியான சிந்தனைகள் ஆழமாக மக்கள் உள்ளத்தைத் தொடும்படி நிகழ்த்தப்பட்டன.

26.07.2001 காலைத் திருவிழாப் பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை நிறைவேற்றி மறையுரை ஆற்றியபோது சமாதானம் செய்வோர்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## பத்திரிகைஇயலுக்கு ஓர் அறிமுகம் நூல் வெளியீடு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை எழுதிய 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' நூல் வெளியீட்டு விழா 26.08.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணிக்கு பாதுகாவலன் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் பத்திரிகையின் இணை ஆசிரியர் ந. வித்தியாதரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக மூத்த பத்திரிகையாளர் திரு ஐயா சச்சிதானந்தம் அவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி நூலின் முதல் பிரதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தாயாரான திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை அவர்களுக்கு திரு வித்தியாதரன் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வை பாதுகாவலன் பத்திரிகையாளர்களும், புனிதவளன் அச்சக பணியாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## அல்பேனிய நாட்டு அருட்கன்னி அன்னை திரேசா புனிதர்?

கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய 05.09.1997 வரை எம்முடன் வாழ்ந்து இறைபதம் அடைந்த அன்னை திரேசாவை புனிதராகத் திருநிலைப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பற்றிய விசாரணைகள் இன்னும் 3 மாதங்களில் நிறைவுபெறவிருப்பதாக இங்கிலாந்திலிருந்து வெளியாகும் கத்தோலிக்க வார ஏடான ''*கத்தோலிக்க ரைம்ஸ்*'' (25.05.2001)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்கத்தாவின் [illegible] ஆயர் ஹென்றி டி சொசா இந்த விசாரணையின் இறுதி அமர்வில் தலைமை வகித்து 99 யூலையில் ஆரம்பித்த விசாரணையை நிறைவுசெய்வார்.

சாதாரணமாக அனைத்து சாட்சியங்களும் பெற்ற பின்னர் முக்திநிலைக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் இடைவெளியிருக்கும் ஆனால் அன்னை திரேசாவைப் பொறுத்தவரையில் வத்திக்கான் வெகு விரைவில் இதனை நிறைவேற்[illegible]

அதேவேளை புனிதராகத் திருநிலைப்படுத்துவதற்கு அன்னை திரேசாவைப் பொறுத்தவரை திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இக்கால எல்லையை தளர்ததியதாகத் தெரியவருகிறது.

அன்னை திரேசாவின் பரிந்துரை மூலம் புதுமைகள் நடந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன எனவும் வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### இரசாயன ஆயுதக் கொள்வனவை கண்டிக்கிறோம்!

பிரச்சனை தீருகிறது என்று எண்ணிய மனதுகளில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை இலங்கை அரசு இரகசியமாக கொள்வனவு செய்த விவகார ஊழல் வெளிச்சத்துக்கு வந்துள்ளமை ஒரு தீராத ஏக்கத்தையும் சோகத்தையுமே ஏற்படுத்தியுள்ளது. மக்கள் மனதுகளில் நெருப்பு அள்ளிக் கொட்டப்பட்டுள்ளது.

த சண்டே லீடர் பத்திரிகை வெளியிட்டுள்ள நீண்ட கட்டுரையில் ஆர்பிஓ – ஏ ஸ்மெல் ரொக்கட் லோஞ்சர் **(RPO – A shmel rocket launchers)** கொள்வனவு செய்ததில் ஊழல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகை ஆயுதங்களை அதன் இரசாயனத் தன்மை கருதி அமெரிக்காவும் நேச நாடுகளும் தடைசெய்துள்ள வேளையில் இலங்கை இவ்வகை ஆயுதங்களை கொள்வனவு செய்தது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

என்ன சாட்டுப் போக்குகள் சொல்லி இந்தக் கொள்வனவுக்கான காரணங்களை நிரூபிக்க முயன்றாலும் இந்த வகை இரசாயன ஆயுதங்களின் கொள்வனவு தற்செயலாக நடந்த ஒன்று அல்ல. நன்கு திட்டமிடப்பட்டே செய்யப்பட்ட ஒன்று.

இப்போது தென்னிலங்கையில் விவாதிக்கப்படும் விடயம் ஏன் அரசு இதைக் கொள்வனவு செய்தது என்பதோ?, எப்படி அரசு இதைக் கொள்வனவு செய்ய முடியும் என்பதோ அல்லாமல் அங்கு லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதா என்ற ஆய்வேயாகும். இது இனப்பிரச்சினை மட்டில் சம்பந்தப்பட்டவர்கள் கொண்ட அக்கறையின்மையும் ஏனோதானோ என்ற போக்கையுமே வெளிக்கொணர்கிறது.

இக் கொள்வனவு பற்றி தென்னிலங்கையில் ஏனோதானோ என்ற எண்ணமும் இது நமக்கெதிராக இல்லைத்தானே என்ற போக்கும் மேலோங்கி இருக்கின்ற வேளையில் இச் செயல்பாட்டை கண்டிக்க யாரும் முன்வரப் போவதில்லை. ஆனால் இச் செயல்பாட்டை நியாயப்படுத்தவும் சரியென வாதிடவும் பலர் முன்வந்துள்ளனர். இது வருத்தமும் வேதனையும் மிகுந்ததாகும்.

வடபகுதியிலிருந்து இவ் ஆயுதக் கொள்வனவு பற்றிய விளக்கங்களையோ விபரங்களையோ தெளிவாக பெற்றுக் கொள்ளாததினாலோ என்னவோ பெரும் எதிர்ப்புக்களை, யும் கண்டனங்களையும் பெரிதாக எல்லோரும் எழுப்பியதாக காணமுடியவில்லை.

எது எப்படி இருப்பினும் இவ் இரசாயன ஆயுதக் கொள்வனவு எந்த வகையிலும் நியாயப்படுத்தக்கூடியதல்ல. வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்று மட்டுமல்ல, இச்செயலினை மேற்கொண்டமைக்காக வெளிநாடுகள் அரசின்மேல் ஒரு அழுத்தத்தினையும் கொண்டுவர வேண்டியதொன்றாகும். பாதுகாவலன் பத்திரிகை அரசின் இரட்டை வேடம் கொண்ட இச்செயல்பாட்டினை வன்மையாகக் கண்டிப்பதோடு உடனே இவ் ஆயுதங்கள் அழிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கிறது.

# அதிசய அ.ம.தி. – அருள்திரு ஏட்றியன் யோசவ்

அருள்திரு ஏட்றியன் ஜோசவ் அவர்களின் குருத்துவப் பொன்விழா ஆகஸ்ட் 6ம் திகதி கொண்டாடப்பட்டது. கௌரவமான குடும்பத்தில் பிறந்த இவர் அமலமரித் தியாகிகள் சபையில்தம்மை இணைத்து இறைபணி புரிய முன்வந்தார். இவரது கடைசி சகோதரரான அருள்திரு தியோஜீனியஸ் அ.ம.தி அவர்களும் பாகிஸ்தானில் பணிபுரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிப்படைக்கு மிக சாதாரணமாகத் தோன்றினாலும் அருள்திரு ஏட்றியன் ஒரு சாதாரண மனிதரல்ல என்பது அவரால் உருவாக்கப்பட்டவர்களுக்கும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குமே தெரியும்.

வெளிப்படையாக நோக்கின் அவரது பணி யாழ்ப்பாணம் கொழும்பு மறைமாவட்டங்களுக்குள் அடங்கியது. அவர் எந்த தூரப் பயணங்களையும் மேற் கொண்டதில்லை. ஆனால் அவர் ஓர் அறிவுக் களஞ்சியம். பூமியில் எந்த விடயமும் அவருக்கு அப்பாற்பட்டதல்ல. அரசியல் விஞ்ஞானம், மதம், எதுவாகிலும் அவருக்கு அத்துப்படி. ஞானப்பிரகாச அடிகள் நிறைவு செய்யாமல் விட்டுச் சென்ற சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை தாவீதடிகளுக்குப் பின் இவரே தொடர முன்வந்தார்.

கொழும்பில் சிறிய குருமடத்திலும், பல பங்குகளிலும் பணியாற்றிய இவர் 1984ம் ஆண்டு முதல் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் 14 ஆண்டுகள் திருநூலும் லத்தீனும் போதித்து வந்ததுடன் அவர்களது ஆன்ம வழிகாட்டியாகவும் இருந்தார். இவர் ஓர் இசை அமைப்பாளருங்கூட சங்கீதங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதிலேயே இவரது கவனம் சென்றது.

அடிகளாரின் உடல் ஆரோக்கியமும் அவரைப் போலவே ஓர் அதிசயம் தான். பல்வேறுபட்ட பிணிகளுக்கு ஆளாகியிருந்த போதிலும், அவர் பொதுவாக வைத்தியர் துணையை நாடுவதில்லை. தாம் அறிந்த மூலிகைகளைக் கொண்டும், தமது உடலுக்குப் பொருத்தமான உணவு, உடற் பயிற்சிகளைக் கொண்டும் தமது ஆரோக்கியத்தைப் பேணி உற்சாகமாகவே காட்சியளிப்பார். பொன்விழாவைக் கொண்டாடும் முதிர் வயதிலும் அவர் ஓய்வாக இருப்பவர் அல்ல.

பொன்விழாக் காணும் இந்த அசாதாரண அடிகளாருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது உடல், உள நலம் நீடிக்கவும், அவரது பணி தொடர அவர் பல்லாண்டு வாழவும் இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

## திருமறை நாடக நூல் தொடர்ந்தும் வெளிவருகிறது

திருமறை நூலாகிய பைபிளை நாடக நூலாக்கி வழங்கும் முகமாக, அதனை முதலில் இருந்து இறுதிவரை தொடர் வரிசையில் எழுதி வெளியிடும் பணியை திருமறைக் கலாமன்றம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது.

இதன் வரிசையில் இதுவரை 25ற்கும் அதிகமான நூல்கள் பைபிள் கதைகளை உள்ளடக்கி வெவ்வேறு தலைப்புக்களில் நாடக நூல்களாக வெளிவந்துள்ளன. நாடக மேடையேற்றம், அன்பளிப்பு போன்ற பலவற்றிலும் பயனுள்ள வகையில் அமைந்துள்ள இந்த நூல்களை திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுகொள்ளலாம்.

# சிறந்த மறைப்போதகர் - அருள்திரு பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி.

அருள்திரு பிரான்ஸிஸ் குலாஸ் *அ.ம.தி. ஆகஸ்ட் 17ம் திகதி தமது குருத்துவப் பொன் விழாவைக் கொண்டாடினார். வங்காலையில் முதற்குருவான இவர் பக்திமிக்க கத்தோலிக்க கிராமத்திலிருந்து அநேக தேவ அழைத்தல்கள் உருப்பெறுவதற்கு முன்னோடியாக விளங்கினார்.*

தமது சபையின் விருதுவாக்கிற்கேற்ப தமது குருத்துவ பணியின் பெரும்பகுதியினை கஷ்டமான பங்குகளில் ஏழை எளியவர்களுக்குப் பணிபுரிவதிலேயே செலவிட்டார். அவர் பணிபுரிந்த யாழ்.– மன்னார் மறைமாவட்டத்தில் 22 பங்குகளிலும் உள்ள மக்கள் அவரை அன்புடனும் நன்றியுடனும் நினைவு கூருகின்றனர். அவரது துறவிக்குரிய எளிமையான வாழ்வும், அர்ப்பணம் மிக்க பணியும் அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டன.

கடந்த சில ஆண்டுகளாக அவர் குருக்கள், துறவியர், குருத்துவ மாணவர் ஆகியவர்களின் ஆன்ம வழிகாட்டியாக விளங்கினார்.

எமது மறைமாவட்டத்துக்காக அவர் நீண்டகாலமாக ஆற்றிய அரும்பணிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர் நீடூழி வாழ்ந்து, இறைவனது அருளை ஏராளமாகப் பெற்று, அவரது நிறைவான பணி மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

# அணையா விளக்கு அன்னை யோசவ்வின்

அருள்சகோதரி சோபியா (தி.கு)

எமது யாழ். திருக்குடும்ப பாடசாலையின் வரலாறானது வீரத்துவம் நிறைந்த முன்னோடிகளின் பங்களிப்பைப் பின்னணியாகக் கொண்டது எனக் கூறின் மிகையாகாது. 1850ஆம் ஆண்டு ஐறிஸ் என்ற பெண்மணி பின்னர் மதர் லூயிஸ் என அழைக்கப்பட்டவர் பல அயர்லாந்து சகோதரிகளின் முன்னோடியாக இருந்துள்ளார். இவர்களின் வழித்தோன்றலாக வந்தவர்தான் மதர் யோசவ்வீன் ரைனன். 1942 தொடக்கம் 1951 வரையும் பாடசாலை ஆசிரியராகவும், மதர் இவாஞ்சலீனுடைய அதிபர் பதவி 1951ல் முடிவடைய அவவின் இடத்தை யார் நிரப்புவார் என்று கலங்கிய வேளை *''இதோ நான் வருகின்றேன்''* என்று இறைசித்தத்தை ஏற்று 1951–1969 வரை பாடசாலை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுத், திறம்பட நடாத்தி அயராது உழைத்துள்ளார். பிரபல்யம் பெற்ற பிறநாட்டவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் இலங்கையின் பிரஜா உரிமையைப் பெற்றுக்கொண்ட ஒரே ஒரு மிஷனறி அருள்சகோதரி யோசவ்வீன் ரைனன் ஆவார். இளம் வயதிலேயே அதைப் பெற்றுக்கொண்டது இவரின் அறிவின் ஆற்றலை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. கல்வி விளையாட்டு, மேனாட்டுக்கலை மற்றும் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் இவரின் காலப் பகுதி பொற்காலமாகக் கணிக் கப்பட்டது.

அனைத்து ஆங்கிலப் பாடசாலைகளும் சுயமொழிப் பாடசாலைகளாக வேண்டும் என்ற அரசின் கட்டாய விதிக்கிணங்க இனியும் தன்னால் ஒன்றும் செய்யமுடியாது எனக் கண்ட மதர் யோசவ்வீன் 1970ல் பாடசாலைப் பொறுப்பை அருள் சகோதரி மாட்டினாவிடம் ஒப்படைத்துவிட்டு தன் சொந்த நாட்டிற்குச் சென்று, அங்கும் கல்வி சம்பந்தமான பணிகளிலேயே ஈடுபட்டார்.

.பல மைல்களுக்கு அப்பால் இருந்தபோதும் அடிக்கடி ஆசிரியர், மாணவிகளுடன் தொடர்பு கொண்டு பாடசாலை அபிவிருத்திக்காகத் தன் செப உதவியை வழங்கி வந்தார். அயர்லாந்தில் வாழ்ந்தாலும் பிரித்தானியாவில் வாழும் திருக் குடும்பக் கல்லூரியின் பழைய மாணவிகள் ஒன்றியத்தைக் கூட்டிக் காலத்திற்குக் காலம் அவர்களின் உறவை வளர்த்து ஒரு குடும்ப மனப்பான்மையை உருவாக்க உழைத்தவர். நாட்டின் யுத்தநிலை காரணமாக எமது கல்வி பாதிப்படுவதையும், பாடசாலை போரின் தாக்குதலுக்கு உள்ளானதையும் அறிந்து கவலைப்பட்டார். அவரது கரிசனையுள்ள தொடர்புகள் கல்லூரி மட்டில் அவருக்குள்ள அன்பை எடுத்துக் காட்டுகின்றன.

கல்லூரி ஆசிரிய, மாணவிகள் மீது அவரது அன்பு, பரிவு, புரிந்துணர்வு, சிறியவர்கள் மீதும் அவர் காட்டிய மனித மாண்புடன் கூடிய மதிப்பு, பாடசாலை ஒழுங்குகளை அனுசரிக்க அவரது வழிகாட்டல்கள், தனித்துவமான தொடர்புகள், உறவுகள், ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதில் அவருக்குள்ள நுண்திறமை, மேனாட்டு பாடல்கள், நடனங்களைப் புதிய முறையில் பயிற்றுவித்து மேடையேற்றுவதிலுள்ள ஆர்வம், வருமுன் காப்போனாக எதையும் முன்கூட்டியே தயார் செய்யும் ஆற்றல் குழந்தையுள்ளமும், கவரும் புன்னகையும், அவர்களின் வாசிப்புத் திறனும் அறிவும் இவையாவும் எம் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் சென்றதை எவரும் மறுக்க முடியாது. தற்போது கல்விக் கூடங்கள் என்றாலென்ன, நிறுவனங்கள், அரசியற்துறை என்றாலென்ன பெயரும், பெருமையும் தேடுவதும் – பாரபட்சமான முறையில் நடந்து கொள்வதும், உண்மை, நேர்மை, நீதியை குழிதோண்டிப் புதைப்பதும் கண்கூடு. எம் அதிபர் இதற்கு விதிவிலக்கானவர்– எவரிடமும் எத்தகைய பாரபட்சமும் இன்றி எச் சூழலிலும் நடுநிலைமையுடன் நடந்தமையால் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று, எவ்ராலும் அன்பு செய்யப்பட்ட தூய இதயம் கொண்டவர். பாடசாலை நிகழ்வுகளின் வெற்றி – தோல்விகளினூடாக மனித விழுமியங்களை உள்ளங்களில் விதைத்தவர். எதையும் மகிழ்வுடனும் நிறைவுடனும் எதிர் நோக்கி ஊக்குவிக்கும் நல்ல ஆசான்.

அண்மைக் காலத்தில் ஈரல் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு நோயின் வேதனையை அமைதியுடன் அனுபவித்தார். தன் இறுதிக்கால நோய் பற்றியும், இறைவனின் நன்மைத்தனம் பற்றியும் தன் உடன் ஆசிரியைக்கும் இன்னும் சிலருக்கும் இறைசித்தத்தை நல் மனதுடன் ஏற்கும் நிலையை வெளிப்படுத்தி எழுதியுள்ளார்.


2001 ஆடிமாதம் 29ந்திகதி தன் உலகவாழ்வின் ஓட்டத்தை ஓடி முடித்துக்கொண்டார். ''நன்று, நன்று நல்ல ஊழியனே! சிறிய காரியங்களில் பிரமாணிக்கமாயிருந்தாய் – பெரிய காரியங்கட்கு உன்னை அதிகாரியாக்குவேன்'' என்ற இயேசுவின் வாக்குக்கு ஏற்ப விண்ணக வாழ்வுக்கு அழைத்துக் கொள்ள எம் செபத்தால் உதவுவோம். மிஷனறி வாழ்வை மேற்கொண்டு எமது மண்ணிற்கு சிறப்பாக எமது கல்லூரிக்கு இவர் ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவோம்.

மதர் யோசவ்வின் ஒரு செபத்தின் பெண்மணி. நாளாந்த பலி விருந்து, மரியன்னையின் பக்தி, நாளாந்த சிலுவைப்பாதை இவற்றில் தவறியவர் அல்லர். ஒரு அப்போஸ்தலன் தன் நற்செய்தி அறிவுப் பணியை ஆற்ற இறை ஒன்றிப்பு அவசியம் என்பதை ஆழமாக அறிந்திருந்தவர். அவருடன் உரையாடுவதும், உதவிபெறுவதும் அவருக்கு மகிழ்ச்சியைத் தரும். அவர்களின் வாழ்வு, சேவைக்காக இறைவனுக்கு நன்றி கூறும் வேளை, அவர்களின் அன்பு, அறிவு உறவைப் பெற்ற அனைவரையும் அவவின் விண்ணக வாழ்வுக்காக வேண்டிட அழைக்கின்றோம்.

**யாழ். கல்லூரியின் உயர்வுக்காக உங்களைத் தியாகப் பலியாக்கிய அயர்லாந்தின் உத்தம- தாயே!**

**உங்கள் தியாகச் சுடர் ஒளி என்றும் எம் கல்லூரியில் ஒளிர எமக்காக இறைவனை வேண்டுங்கள்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். மறைமாவட்ட நிலைய 3 மாதகால பயிற்சியை முடித்து சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் நிலைய இயக்குனர் ஆர்.சி.எக்ஸ். நேசராஜா அடிகள் உரையாற்றுகிறார். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் மறையாசிரியர் திரு எஸ். சௌந்தரமும் மேடையில் இருக்கின்றனர்.



மறைக்கல்வி நடுநிலைய விழாவின்போது திருப்பலியில் பங்குபற்றிய ஒரு பகுதியினர்



கடந்த 2 ஆண்டுகளாக அன்னையின் தரிசனம் காண தீராத ஆர்வம் கொண்ட ஒட்டகப்புல மாந்தர்களும், அயற் பங்கு மக்களும் ஆனித் திங்கள் 3ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்னையின் தரிசனம் பெற்றனர்.

ஒட்டகப்புல அன்னையின் அடியார்களின் அயராத முயற்சியினாலும் எமது பங்குத்தந்தையின் ஒத்தாசையினாலும் பாதுகாப்புப்படையினரின் அனுமதியினாலும் பல்வேறு உள்ளங்களின் உதவிக் கரத்தினாலும் எமது நீண்டநாள் கனவு நனவாகியது. திருச்சபை அன்னையின் பிறந்த நாளிலே தூய ஆவியைப் பெற்றுத் திடம் பெற்றவர்களாய் மாறிட அன்னையின் பாதத்தில் அன்றைய நாளில் காலை 9.00 மணியளவிற் பங்குத்தந்தையின் தலைமையிற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு எமது மக்களின் சோகக் கதைகள் மறைந்து சமாதானம் உதயமாகிட ஒட்டகப்புல மாந்தர் நாயகியின் பாதம் மீண்டும் அமர்ந்திட இறைவனிடம் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

# அன்னையே ஆறுதல் தா!

வையத்து முழு நிலவே வானகத்து வண்ணமலரே
வானகத்து வண்ணமலரே......
தெய்வம் தேடிவந்த தேவாலயமே.....
உள்ளன்பு ஒன்றே நிஜமென்று - எம்
ஊமை விழிகள் கண்ணீர் துடைக்க
ஆண்டவனின் அடிமையாகிய
இறையன்பின் பெட்டகமே
கண்ணீரில் கரையும் எம் இரவுகளையும்
செந்நீரில் தோய்ந்த எம் இதயங்களையும்
கண்ணோக்கும........ அம்மா.
கல்லறைக்காற்றுக்கள் எம் தேசத்தில் வீசும்
சில்லறைகளாய் சிதறும் பிஞ்சு உடல்களின்
பிணவாசத்தால் - எம்
அன்னையர்களின் வாய் பேசும்
நேசமகனின் வெற்றுடல் தாங்கிய - உன்
மடியின் உணர்வுகளுக்கு - இது
புதியவை அல்ல என்பதால்
அன்னையே எமக்கு ஆறுதல் தா.....

S.A.S. ஹரன், நவாலி

## மடுமாதாவின் திருசொரூப யாத்திரை வழிபாட்டுக்கென இயற்றப்பட்ட செபம்

*மருதமடு மாதாவே! எங்கள் அன்புத் தாயே, அரசியே!* இந்த இக்கட்டான இருண்டவேளையில் எமது நாட்டின் மீது உமது வல்லபம்மிக்க தாய்க்குரிய பரிந்துரைகளையும் பாதுகாவலையும் வேண்டுகின்றோம். *அன்பான தாயே!* எமது நாடு மீளவும் சமாதானம் அடையும்வரை ஆண்டவர் முன்னிலையில் இடைவிடாது எமக்காகப் பரிந்துபேசியருளும். உமது ஆதரவில் பிள்ளைக்குரிய அன்பும் நம்பிக்கையும் உடையவர்களாய், எமது நாட்டில் அரிதாகவும், புதுமையாகவும் காணப்படும் சமாதானத்தை அருளுமாறு உருக்கமாக வேண்டுகின்றோம். இலங்கையில் இந்த சமாதானம் என்னும் புதுமையைச் செய்தருளுமாறு உமது திருக்குமாரனிடம் மன்றாடி வேண்டுகின்றோம்.

வேற்றுமைகளையும் பகையையும் உண்டாக்கும் சர்ச்சைக்குரிய விடயங்களை அன்பும் மன்னிப்பும் நிறைந்த இதயத்துடன் நோக்கக்கூடியவர்களாக நாம் இருக்கும் படியாக எங்களுக்காகப் பரிந்து பேசியருளும். எமது மக்களின் பல தரப்பட்ட தேவைக ளைப் புரிந்துகொள்ளவும், எமது சுயநலத்தையும் அகங்காரத்தையும் கைவிட்டு, நீதிக்காகவும் சமாதானத்துக்காகவும் உழைக்கவும் எமக்குத் துணைபுரியும்.

எமது தலைவர்கள் தீர்மானங்களை எடுக்கும்போது, அதிகார வேட்கையினாலோ, சுயலாபத்தினாலோ, விரோதத்தினாலோ உந்தப்படாமல், புண்பட்ட இதயங்கள் குணம்பெறவும், முரண்படும் கட்சிகள் ஒப்புரவாகவும் வழிசெய்யும் தீர்வுகளைக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டும்படியாக அவர்களுக்காக மன்றாடும். எமது நாட்டின் சகல மக்கட் கூறுகளினதும் ஆதரவுடன் மீண்டும் நாட்டை ஆக்கப் பாதையில் வழிநடத்துவார்களாக. உமது மக்களாகிய நாம் இன்றும் என்றும், உமது தாய்க்குரிய அன்பிலும் ஆதரவிலும் நம்பிக்கை வைக்கின்றோம்.

*ஆமென்.*

# சமாதானமே சமாதானத்தின் சக்தி

தாழ்ச்சி உள்ளம் கொண்ட மரியாளுக்கு ஏன் இறைவன் ஒரு விசேட தனித்துவமான மகிமையைக் கொடுத்தார்? மரியாள் எந்த வேளையிலும் இறைசித்தத்துக்கு கீழ்ப்படிய ஆவலாய் இருந்தாள். இவ்வுலகில் வாழும்போதே இறைவனுக்கு சொந்தமானவளாகவும், மறுவுலகிற்கு உரியவளாகவும் இருந்தாள். அன்னை மரி எமக்குத் தருகின்ற அழைப்பு என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளே சுமந்து செல்கின்ற எம்மை, அடிமைப்படுத்துகின்ற விலங்குகளில் இருந்து முற்றுமுழுதாக விடுவிக்க வேண்டும்.

நம் நாட்டு தமிழ், சிங்கள மக்களிடையே எத்தனையோ அடாவடித்தனங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மாசற்ற இரத்தம் சிந்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. உயிரிழப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அநேகமான பொதுமக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கடந்த இருபது வருடங்களாக இடத்துக்கிடம் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வன்முறைச் சுழற்சியில் இருந்து ஏன் நாங்கள் வெளிவர முடியாதவர்களாக இருக்கின்றோம். போரைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்ற உண்மையற்ற கதைக்க இதயத்தாலும், மனத்தாலும் அடிமைப்பட்டவர்களாக ஏன் நாங்கள் தொடர்ந்தும் சென்று கொண்டிருக்கிறோம். எமது தனிமனித அடிமைத் தளைகளிலிருந்தும் எம்மை விடுவிக்க வேண்டுமெனில் மரியாளில் காணப்பட்ட சமதர்ம உணர்வு, எம்மிலும் ஏற்படவேண்டும். எமது சுயநலப் போக்குகளில் இருந்து விடுபட்டு, விடுதலை பெற்று, அனைவரையும் அனைத்திலும் சமநோக்குடன் ஏற்றுக்கொள்ளும் பண்பும், எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்துவாழும் தன்மையும் எம்மிடையே உருவாகவேண்டும். இன்று இத்தகைய நிலைப்பாடுகள் எம்மிடையே உருவாக வேண்டும். இன்று இத்தகைய நிலைபாடுகள் எம்மிடையே அற்றுப்போனதினாலேயே இலங்கையின் தற்போதைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு கடினமான ஒன்றாகத் தோன்றுகின்றது. மனித மாண்பின் அனைத்துப் பரிமாணங்களையும், உள்வாங்கிய நிலையில், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும், நிலைபெறச் செய்யும் சமூக நீதியின் ஊடாக உண்மையின் ஒளியில் உருவாகும் சமாதானமே பொருளாதார சுபீட்சத்தையும், பொதுவாழ்வின் மேம்பாட்டையும் முன்னெடுத்துச் செல்லமுடியும். சமாதானத்திற்கான தனிமனிதத் தேடலே சமயங்களின் தோற்றத்திற்கு வித்திட்டிருக்கின்றது. ஆனால் அவை நிறுவனவயப்படும்போது சமாதானம் உயிரற்றதாகி உணர்வு இழந்துவிடுகின்றது.

நீதியும், அறமும், சுபீட்சமும், சமாதானமும் வெறும் சமயசாதனங்கள் அல்ல. இவ் விழுமியங்கள் வாழ்வதும், வீழ்வதும் பக்தி முயற்சிகளாலும் பரவசப் பேச்சுக்களாலும் அல்ல. இவை சமய நம்பிக்கைகளின் நூல்களின் உள்ளடக்கங்களாகப் போற்றப்படுகின்ற போதிலும் சமூக, இன, சமய வேறுபாடுகளின் அழுத்தங்களாலும் உந்தப்படுகின்றன. சமரசப் பேச்சுக்களும் சாசனங்களும் சர்வதேச உடன்படிக்கைகளும் கூட சமாதானத்திற்கான பாதைகளைச் சுட்டிக்காட்ட உதவுமேயன்றி அவை சமாதானத்தை ஒரு சாதாரண சந்தைப்பொருள் போன்று ஆக்கிவிடமுடியாது. மனிதவாழ்வின் அனைத்து அம்சங்களையும் தொட்டு நிற்கும் உயிரூட்டமுள்ள சமூகநெறியான சமாதானம் மானிடத்தினுள் உறையும் ஓர் ஒப்பற்ற ஆன்மீக சக்தியாகும். நீதியுடன் கூடிய சமாதானத்திற்கான தேடல் எமது மறையுரைகளிலும், மறைக் கல்வியிலும், மாநாடுகளிலும், மறைபணியிலும் எதிரொலித்தல் வேண்டும். குழுமச் சிந்தனையும், ஒன்றிணைந்த செயற்பாடும், பன்நிலைப் பங்களிப்பும் இதற்கு அத்தியாவசியமானவை. சமாதானத்தின் அரசியல், மனிதாதய மறைஇயல், இறைஇயல் பரிமாணங்களை எமது தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இடையறாது ஆய்தல் ஒருபுறம் சமாதானத்திற்கான நீதியின் பாதையை ஆயத்தம் செய்யவும், மறுபுறம் நீதி சமாதானத்திற்கு எதிரான சக்திகளை இனம் காணவும் வழிகோலும் நீதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுதல் மட்டும் இறையரசின் பணியாகிவிடமுடியாது. அநீதியையும், சமாதானத்தையும் இனம்காட்டி அவற்றை முழுமனதுடனும் தீர்க்கமான திடனுடனும் எதிர்க்க வேண்டியதும் இப் பணியின் இணைபிரியாத இரு அம்சங்களில் ஒன்றாகும். இவை தவிர்ந்த நிலையில் திருச்சபையின் சமூகப்பணிக்கும் கிராமப்புற சங்கக் கிளைகளின் பங்கீட்டுப் பணிக்கும் அதிக வேறுபாடு இருக்கமுடியாது.

கடந்த பத்து ஆண்டுகளிலும் எமது நாட்டில் நடந்த உயிர், உடைமைச் சேதங்கள் இந்த நூற்றாண்டு முழுவதிலும் இலங்கையில் நிகழ்ந்த அழிவுகளை விட அதிகப்படியானது. இந்தப் பேரழிவுகளின் மத்தியிலும் எமது நாட்டின் நான்கு மறைகளுமே ஏதோ ஒரு வகையில் வளர்ந்திருக்கின்றன. இந்த எண்ணுக்கணக்கிலான வளர்ச்சியின் மத்தியிலும் எத்தனையோ உயிர்கள் அநீதியாக அழிக்கப்படுகின்றன என்றால் **எமது வளர்ச்சி எங்கே செல்கின்றது? நீதி, சமாதானம் இவை யாருக்கு? எமக்கா அன்றேல் இறைவனுக்கா?** இவற்றிற்கான யதார்த்தம் தோய்ந்த விடைகளைக் காண்பதிலேயே எமது சமயங்களின் சமாதானமான எதிர்காலம் தங்கியுள்ளது.

*ப.மே. பெனிற்றா*
*சென். ஜேம்ஸ் வீதி,*
*இளவாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பொதுநிலையினர் மகாநாடு
## புத்தாயிரம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்ற கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்

# "நான் திராட்சைக்கொடி நீங்கள் அதன் கிளைகள்"

சென்ற இதழ் தொடர்ச்சி...

இந்தத் தெய்வீக உறவுகளை ஏற்படுத்த இந்த மீட்பின் திட்டத்திற்காக இறை மகனை உலகிற்கு அளிக்க இறைவன் கன்னி மரியாளைத் தெரிந்து எடுத்தார். தேவ தாயின் தாழ்மையான ஏற்றுக்கொள்ளல் வழியாக உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகட்டும் அவள் மீட்புத் திட்டத்தின் பங்காளியாக ஏற்படுத்தப்பட்டாள்.

உலகைப் படைத்த இறைவன் மனிதர்களின் துன்பத்தையும், வேதனையையும் தன்மேல் ஏற்றுக்கொள்ள மனுவுருவானார். மனிதனுடைய பாவத்தினால்தான் இவ்வுலகில் துன்பம், வேதனை, மரணம் தோன்றியது. ஆனால் இறைவன் இந்த துன்பத்தையும், மரணத்தையும் பயன்படுத்த மனிதனுக்கு மீட்பைக் கொடுத்தார். கல்வாரி மலையில் அவர் பட்ட வேதனை, துன்பம், வீண் குற்றச்சாட்டு போன்றவைதான் இந்த உலகிலே மீட்பைத்தந்தது. கல்வாரிப் பலியைத்தான் நாம் திருப்பலியிலே நினைவு கூருகின்றோம். இந்த உலகிலே வாழும் நாமும் இந்த வேதனையையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றோம். அவ்வேளைகளில் எல்லாம் நாம் இந்த வேதனையையும், துன்பத்தையும் நாளாந்தம் அனுபவிக்கின்றோம். அவ்வேளைகளில் எல்லாம் நாம் அவர் அண்டை நெருங்கிச் செல்கின்றோம். என்னைப் பின் செல்ல விரும்புகின்றவன் தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின் செல்லட்டும், சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாற்றுவேன் என்று கூறும் இயேசு துன்பத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு மீட்பை பெற்றுத் தருகின்றார்.

நீங்களும் இயேசுவின் மீட்பில் பங்கெடுக்கலாம் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்ளும்போது, இந்த துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் தியாகம் இறையண்டை செல்ல எமக்கு ஒரு உந்துதலைத் தர வேண்டும். இந்த உந்துதல்தான் மற்றவர்களுக்கு மீட்பைத்தரும் கருவியாக மாறுகின்றது. எனவே கூடுதலான துன்பத்தை உங்களுக்குத் தருமாறு இறைவனிடம் மன்றாடுங்கள். இதன் மூலம் நீங்கள் நரக வேதனையில் இருக்கும் எம்மவரை மீட்டு எடுக்கலாம். அவர்களும் அங்கு வேதனையை அனுபவிக்கும் போது எமக்கு மீட்புக் கிடைக்கும், இறை இயேசுவோடு நாம் அனுபவிப்போம்.

எங்களுடைய வேதனைகளும் மீட்பின் கருவிகளாக மாறவேண்டும் நரக வேதனையில் இருப்பவர்களுக்கு மட்டமல்ல மாறாக இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும், சிலுவையில் இயேசு அனுபவித்த வேதனையோடு நாமும் இணைந்து கொள்வோம். இதையே இயேசு நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி மனந்திரும்பத் தேவையில்லாத 99 பேரைவிட அதிமாயிருக்கும். லூக்.15:7

இது அன்பினால் தூ ண்டியெழுப்பப்பட வேண்டும். எனவேதான் இயேசு நாமன் உங்களை அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யவேண்டும் என்கின்றார்.

## பரிசுத்த ஆவி

உமது வாழ்வின் முதல் நான்கு வருடங்களில் என் நடந்தது என்பது உமக்கு நினைவுபடுத்த முடியாமல் இருக்கும். ஆனால், உமது 5 வயதில் நடந்த சம்பவங்கள் சற்று ஞாபகத்திற்கு வரலாம் அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை இப்போது நினைவுக்குக் கொண்டுவாரும். முதன்முதல் நீர் பாடசாலைக்குச் சென்ற தினம், நன்மை பெற்ற தினம், முதன்முதல் பாவசங்கீர்த்தனம் செய்த தினம், உமது உறுதிப்பூசுதல் தினம் உமது திருமண நாள் இந்நாட்களில் உமக்கிருந்த உணர்வுகளைச் சற்று சிந்தித்துப் பாரும். ஏவ்வாறு இறைவன் உம்மை அன்பு செய்துள்ளார் என்று எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தந்த வாழ்க்கை உமக்கு அளவிட முடியாத ஒரு கொடையாகும். ஆரம்பத்தில் நாம் பார்த்தோம் தாயின் வயிற்றில் மனிதன் எவ்வாறு உருவாகுகின்றான் என்று. ஆனால் இப்போது வேதாகமத்தில் தொடக்கநூலில் என்ன சொல்லப்படுகின்றது என்று தொடக்கநூல் 1:1–27 கூறுகின்றது.

ஆரம்பத்தில் இறைவன் வானத்தையும், பூமியையும் படைத்தார். இறுதியாக மனிதனைத் தனது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார்.

கடவுள் மனிதனைத் தமது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார். ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதி.1:26–27

இத்தகைய கடவுளின் சாயலை உங்களிலும், என்னிலும் காணலாம். நாங்கள் அழிவுக்குரிய உடலை மட்டுமல்ல அழியாத கடவுளின் சாயலையும் மாதிரியையும் கொண்டுள்ளோம்.

இந்த கடவுளின் சாயல் என்பது என்ன? பிழைவிடுவது மனித இயல்பு, அதை மன்னிப்பது தெய்வச் செயல் எனும் வாக்கியம் இந்த கேள்விக்கான விடையை நமக்குத் தருகின்றது. மேலும் 1அருளப்பர் 4: 7–8 இல் கடவுள் அன்பாய் இருப்பதால் நாமும் ஒருவர் ஒருவரை அன்புசெய்வோமாக என்று கூறப்பட்டுள்ளது.

கடவுளின் அன்பு மயம் பத்துக்கட்டளைகள் இந்த அன்பை பூரணப்படுத்தும் சட்டங்களாகும். இவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக கடவுளையும், அடுத்து அயலவரையும் அன்பு செய்தலாகும். இவ்வுலகிற்கு வந்த கடவுளின் மகன் இயேசு இந்தக் கட்டளைகளை நமக்குத் தருகின்றார். நான் உங்களை அன்பு செய்வதுபோல் ஆகவே இந்த கடவுளின் சாயல் என்பது அன்பு ஒன்றே.

அன்பு வெறுமனே மனித குணாதிசயம் மட்டுமல்ல, தெய்வத்தன்மை வாய்ந்தது. பரிசுத்த ஆவியே எம்மில் இந்த நல்ல குணாதிசயத்தைத் தூண்டி எழுப்புகிறார். அது பரிசுத்த ஆவியின் கனியாகும். இந்த ஆவிமூலமே அன்பின் கனிகளாகிய மகிழ்ச்சி, சமாதானம் பொறுமை, நன்மைத்தனம், இரக்கம், சாந்தகுணம், விசுவாசம், தன்னடக்கம், நன்னயம், கற்பு போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றோம்.

கடவுளின் சாயலை மேலும் நமதாக்கிக் கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். எமது வாழ்வில் இயேசுவை இனம் காணுவது மட்டுமல்ல அன்பை நமதாக்கிக்கொள்வதன் மூலம் இயேசுவை அனுபவிக்கவேண்டும். அன்பை எங்களில் செயல்படுத்தும் போது பரிசுத்த ஆவி எங்களில் வாழ்ந்து செயற்படுகிறார் என்று கூறலாம். இத்தகைய ஆன்மீக வாழ்வையே நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

பிழைவிடும் சந்தர்ப்பங்களில் மீண்டும் நாங்கள் எழுந்து கடவுளின் அன்பில் ஆழமாக வேண்டும். அப்போதே பரிசுத்தஆவி நம்மில் குடிகொண்டு தமது அருட்கொடைகளை நமக்கு அருளுவார்.

*அன்பின் உயர்ந்த கொடை நமது அயலவனே ஏனையவை இதற்குப் பின்பே.*

நமது சொந்த நலன்களுக்காக இந்த ஆன்மீக கொடை தரப்படவில்லை. பொது நன்மைக்காகவே தரப்படுகின்றது. எனவே கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டும். நமது திருத்தந்தை அண்மைய இந்திய விஜயத்தின்போது மீளவும் இந்த நற்செய்தி அறிவிப்புப் பணியை வலியுறுத்தியதை அறிவோம். ஆகவே பொதுநிலையினரின் ஆன்மீகத்தைக் கட்டியெழுப்பி கிறிஸ்துவை பறைசாற்றுவோம்.

## முடிவுரை

பொதுநிலையினரின் ஆன்மீகத்தை வயப்படுத்த நாம் எம்மில் பின்வரும் மனநிலையை உருவாக்க வேண்டும்.

1. **பல தரப்பட்ட சூழ்நிலைகளிலும் இறைச்சித்தத்தைச் சார்ந்தவற்றை செயற்படுத்த முன்வரவேண்டும்.**
2. **நாம் எம் சொந்த வாழ்விலும், சமூக வாழ்விலும் நற்செய்திக்கும், இறைவார்த்தைக்கும் ஏற்றவாறு வாழ்ந்து காட்டவேண்டும்.**
3. **அருள்வாழ்வை அனுபவிப்பதன் வழியாக திருவருட்சாதன வாழ்வுக்கு சாட்சி பகர்வதன் மூலமாக உலகத்திற்கு ஒளியாக இருக்கவேண்டும்.**

மேற்கூறப்பட்ட மனநிலையை அடைவதற்கு நாம் கலை, கலாச்சார, சமூக, உலக சூழ்நிலைகளில் தூ யஆவியின் வழியாக இறை வார்த்தைக்கு ஏற்றவாறு செயற்படவேண்டும். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து யேசுவின் திராட்சைத் தோட்டத்தில் நற்கனி தந்து இறைவனை மகிமைப்படுத்தி உலகத்திலுள்ள, அனைத்தையும் யேசுவின் பாதம் கொண்டுவரும் பணிக்கு நாம் அனைவரும் எமது பங்களிப்பைச் செய்வோம்.

''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தெரிந்து கொண்டேன்.''

# பாதுகாவலன் விற்பனையாகும் இடங்கள்

யாழ் பேராலயப் பங்கு – 50
யாழ் அடைக்கல அன்னை ஆலயம் – 100
யாழ் புனித யுவானியார் ஆலயம் – 30
நல். புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் – 25
நாவந்துறைப் பங்கு – 60
திருநெல்வேலிப் புங்கு – 80
பருத்தித்துறைப் பங்கு – 225
மணற்காடு பங்கு – 50
அச்சுவேலி – 45
கரவெட்டி – 57
சுன்னாகம் பங்கு – 50
மல்லாகம் திரு A. சிங்கராஜா – 26
மல்லாகம் திரு. S. உதயராஜ் – 15
உரும்பிராய் பங்கு – 50
நவாலி புனித பேதுருவானவர் – 50
ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயம் – 70
மானிப்பாய் பங்கு – 121
சில்லாலை, பண்டத்தரிப்பு, மாதகல் பங்குகள் – 90
இளவாலை, புனித அன்னாள் – 30
இளவாலை புனித யாகப்பர் – 45
இளவாலை புனித யூதாததேயு – 50
நாரந்தனைப் பங்கு – 60
கரம்பன் – 40
நெடுந்தீவு – 80
திரு. செல்மர் எமில் பாண்டியன்தாழ்வு – 15
செல்வி தவம் குருசுமுத்து – 10
செல்வி S.M. வுளோறன்ஸ் – 12

**வன்னி மாவட்டம்**

புதுக்குடியிருப்பு – 10
குமுளமுனை – 11

**கொழும்பு மாவட்டம்**

திரு. J.M. சிவப்பிரகாசம் – 20
திரு. J. அருளானந்தம் – 30
திரு. R.C. மரியரட்ணம் – 50
திருக்குடும்பக் கன்னியர்மடம் தெஹிவளை – 10
திரு. A. புஸ்பராஜா – 20
புனித. பிலிப்புநேரியார் ஆலயம் கொழும்பு – 03
[illegible] – 10
[illegible] – 15
பங்குத்தந்தை – பண்டாரவளை – 25
கார்மேல் மடம் – மாம்புரி – 10
திருமதி S. பிலோமினா, மாம்புரி – 10
திருக்குடும்பக் கன்னியர்மடம், தலவாக்கலை – 05

**தனிப்பிரதிகள்**

யாழ் மாவட்டம் – 142
கொழும்பு மாவட்டம் – 44
நீர்கொழும்பு – 05
வன்னி மாவட்டம் – 57
மட்டக்களப்பு– திருகோணமலை – 24
புத்தளம் – சிலாபம் – 06
கண்டி – 17

**வெளிநாடுகள்**

கனடா – 25
ஜேர்மனி – பிரான்ஸ் – 06
லண்டன் – 02
இத்தாலி – 02
கொரியா – 01
சுவிஸ் – 02
பிலிப்பைன்ஸ் – 01
இந்தியா – 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் கற்பனை

தொகுப்பு :- அருள்திரு எஸ்.ஈ.என். குணசீலன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

ருவரும் ஓயாது தாராளமாக மற்றவர்களை மன்னிக்க வேண்டும். பரஸ்பர அன்பு இதனைத் தூண்டுகிறது. கிறிஸ்தவன் அன்பு இதனைக் கோருகின்றது (மத். 18: 21–22, லூக். 17: 4).

தமது குழந்தைகளை வளர்ப்பதிலும், அவர்களது உடல்சார்ந்த, ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பெற்றோர் கவனமும் கரிசனையும் எடுக்கும்போது, அது அவர்களது அன்பையும் மதிப்பையும் காட்டுகின்றது. பிள்ளைகள் வளர்ந்து வரும்போது, தமது பகுத்தறிவையும் சுதந்திரத்தையும் சரியான விதத்தில் பயன்படுத்தக் கற்றுக்கொடுக்குமாறு இந்த அன்பும் மதிப்புமே பெற்றோரைத் தூண்டுகின்றன.

பிள்ளைகளின் கல்விக்கு முதற் பொறுப்புள்ளவர்களாய் இருப்பதால், தமது மத நம்பிக்கைகளுக்கேற்றதான ஒரு பாடசாலையைத் தேர்ந்தேடுக்கும் உரிமை பெற்றோருக்குண்டு. இது ஒரு அடிப்படை உரிமை. கூடியமட்டும், கிறிஸ்தவ ஆசிரியர்களாகப் பணியாற்றுவதில் தமக்கு நன்கு துணைபுரியக் கூடிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும் (GE 6). பெற்றோரின் இந்த உரிமையை உறுதிப்படுத்துவதும், அதை நிறைவேற்றுவதற்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவதும் அரச அதிகாரிகளின் கடமையாகும்.

பிள்ளைகள் வளர்ந்தபின் தமக்குரிய தொழிலையும், வாழ்க்கை அந்தஸ்த்தையும் தெரிந்துகொள்ளும் உரிமையும் கடமையும் அவர்களுக்குண்டு. தமது பெற்றோரோடு நம்பிக்கையுள்ள ஓர் உறவை அமைத்துக்கொண்டு, தமது புதிய பொறுப்புக்களை அவர்கள் ஏற்கவேண்டும். தமது பெற்றோரின் அறிவுரையையும், ஆலோசனையையும் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொழிலையோ, வாழ்க்கைத் துணையையோ தேர்ந்தெடுப்பதில் பெற்றோர் தமது விருப்பத்தின்படி நடக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாது. இந்தக் கட்டுப்பாடு அவசியமாக இருப்பினும், பிள்ளைகளுக்கு நல்லறிவுகளைக் கூறுவதற்கு, முக்கியமாக ஒரு குடும்பத்தை அமைப்பதற்குத் திட்டமிடும்போது தடையேதுமில்லை.

குடும்ப பந்தங்கள் முக்கியமானவை, ஆனால் வரம்பற்றவையல்ல. ஒரு பிள்ளை முதிர்ச்சியடைந்து, மனிதன் என்ற முறையில் ஆன்மீகத்திலும் தன்னுரிமை பெறுகின்றது. அதுபோல இறைவனிடமிருந்து வரும் தனி அழைப்பும் இன்னும் தெளிவாகவும், வலுவாகவும் வெளிப்படுகின்றது. பெற்றோர் இந்த அழைப்புக்கு மதிப்பளித்து அதைப் பின்பற்றும்படி தமது பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவனது முதல் அழைப்பு இயேசுவைப் பின்பற்றுவதே என்பதை அவர்கள் உறுதியாக நம்பவேண்டும்.

**"என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்"** *(மத். 10:37, 16:25).*

இயேசுவின் சீடராவது என்றால் இறைவனது குடும்பத்தில் இணைந்திருக்க விடுக்கப்படும் அழைப்பை ஏற்று, அவரது வாழ்க்கை முறையின்படி வாழ்வதேயாகும். **'விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும் தாயும் ஆவார்'** *(மத்.12: 49).*

இறையரசுக்காக கன்னிமையில் துறவற வாழ்க்கையிலோ, குருத்துவப் பணியிலோ தம்மைப் பின்பற்றும்படி ஆண்டவர் தம் பிள்ளைகளில் ஒருவருக்கு அழைப்பு விடுக்கும்போது, பெற்றோர் அதை மதித்து மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் அதை வரவேற்க வேண்டும்.

## அரசியல் சமுதாயத்தில் அதிகாரிகள்

எமது நன்மைக்காக இறைவனிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுள்ள அனைவரையும் மதிக்க வேண்டுமென்று இறைவனது நான்காம் கற்பனை கட்டளையிடுகிறது. அதிகாரத்தைச் செலுத்துவோரின் கடமைகளையும், அதிலிருந்து நலனடைவோரின் கடமைகளையும் அது தெளிவுபடுத்துகின்றது.

## அரச அதிகாரிகளின் கடமைகள்

அதிகாரம் செலுத்துவோர் அதை ஒரு சேவையாகக் கருத வேண்டும். **'உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்'** *(மத். 20:26).*
கடவுளிடமிருந்து வருதல் , நியாயமான தன்மை, குறிப்பிட்ட இலக்கு ஆகியவற்றைக் கொண்டே அதிகாரம் செலுத்துதல் அறமுறைப்படி அளவிடப்படுகின்றது. மனித மாண்புக்கும், இயற்கைச் சட்டத்துக்கும் முரணான ஒன்றை ஒருவரும் கட்டளையிடவோ, நிறுவவோ முடியாது.

அதிகாரத்தை நிறைவேற்றுவதானது, அனைவரும் தமது சுதந்திரத்தையும், பொறுப்புக்களையும் செயற்படுத்துவதை இலகுவாக்கும் பொருட்டு, மதிப்பீடுகளின் சரியான படிநிலை அமைப்பை வெளியரங்கமாகக் காட்டுவதேயாகும். அதிகாரத்திலுள்ளோர் சமாதானத்தையும் இணக்கத்தையும் கருதி, ஒவ்வொருவருக்கும் தனித்தனி நீதி செலுத்தும்போது அவரவருடைய தேவைகளையும் பங்களிப்பையும் கருத்திற்கொண்டு விவேகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தாம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்கள் பொதுநலனுக்கு மாறாக, சுயலாபத்தைக் கருதாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் ( CA 25).

அரசியல் தலைவர்கள் அடிப்படை மனித உரிமைகளை மதித்தல் வேண்டும். சகலரின் உரிமைகளையும், முக்கியமாகக் குடும்பங்கள், பாதிப்புற்றோரின் உரிமைகளை மதித்து, மனிதப்பண்புடன் நீதிசெலுத்தவேண்டும்.

குடிமை தொடர்பான அரசியல் உரிமைகள், பொதுநலனின் தேவைகளுக்கேற்ப அளிக்கப்படவேண்டும். முறையான, அளவொத்த காரணங்களின்றி அவற்றை இடைநிறுத்தி வைக்கமுடியாது. அரசியல் உரிமைகள் நாட்டு மக்களினதும் மனித சமுதாயத்தினதும் பொது நன்மைக்காக செயற்படுத்தப்பட வேண்டியவை.

## குடிமக்கள் கடமைகள்

அதிகாரத்திற்குட்பட்டவர்கள் அதிகாரத்திலுள்ளவர்களை, அவர்களைத் தமது கொடைகளின் காப்பாளராக ஏற்படுத்திய கடவுளின் பிரதிநிதிகளாகக் கருத வேண்டும் (உரோ. 13: 1–2).

*"அனைத்து மனித அமைப்புக்களுக்கும்*
*ஆண்டவரின் பொருட்டுப் பணிந்திருங்கள்....*
*நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள். விடுதலை*
*என்னும் போர்வையில் தீமை செய்யாதீர்கள்.*
*கடவுளுக்கே அடிமைகளாய் இருங்கள்" ( 1பேதுரு 2: 13,16).*

ஆட்களின் மகத்துவத்துக்கும் சமுதாயத்தின் நன்மைக்கும் [illegible] தோன்றுவதை விமர்சித்துக் குரல்கொடுக்கும் உரிமையும், சிலவேளைகளில் [illegible] கடமையுங்கூட, அவர்களது பற்றார்வம் மிக்க உடனுழைப்பில் அடங்கியுள்ளது. உண்மை, நீதி, ஒருமைப்பாடு, சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில், சமுதாய நலனுக்கு நிர்வாக அதிகாரிகளோடு சேர்ந்து பங்களிப்புச் செய்வது குடிமக்களின் கடமையாகும். நாட்டுப் பற்றும், நாட்டுச் சேவையும் நன்றிக் கடனாகும். இது அன்பு எனும் வகையுள் அடங்கும். குடிமக்கள் சட்டபூர்வமான அதிகாரத்திற்குப் பணிய வேண்டும். பொதுநன்மைக்கேற்ற பணிகளைச் செய்யவேண்டும். இதற்காக அரசியல் சமூக வாழ்வில் தமது பங்கை நிறைவேற்ற வேண்டும்.

அதிகாரத்துக்குப் பணிதல், பொதுநன்மைக்காகக் கூட்டுப் பொறுப்பேற்றல் என்பவற்றிலிருந்து வரிசெலுத்துதல், வாக்குரிமையைப் பிரயோகித்தல், நாட்டைப் பாதுகாத்தல் ஆகிய கடப்பாடுகள் பிறக்கின்றன.

**'அனைவருக்கும் நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுங்கள். தலைவரி செலுத்துவோருக்குக்குத் தலைவரியும், சுங்கவரி செலுத்துவோருக்கு சுங்கவரியும் செலுத்துங்கள். அஞ்சவேண்டியவர்களுக்கு அஞ்சுங்கள் மதிக்க வேண்டியவர்களை மதியுங்கள்'** *(உரோ. 13:7).*

**"கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்தநாட்டில் வசிக்கிறார்கள், ஆனால் அந்நிய குடியிருப்பாளர் போல் வசிக்கிறார்கள். குடிமக்கள் போல் அனைத்திலும் பங்கு கொள்கிறார்கள், அயல்நாட்டவரைப் போல் அனைத்தையும் சகிக்கின்றனர். ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்களுக்குப் பணிபுரிகின்றனர். அவர்களுடைய வாழ்க்கைமுறை சட்டங்களுக்குப் பணிபுரிகின்றனர். அவர்களுடைய வாழ்க்கைமுறை சட்டங்களுக்கும் மேலானது. இறைவன் அவர்களுக்கு வகுத்தமைத்த நிலை எவ்வளவு மேன்மையான தெனில் அதைத் துறந்துவிட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை"** (Ad Diogetums 5,5 and 10;6,10; PE2, 1173 and 1176).

அப்போஸ்தலரான பவுல் அரசர்களுக்காகவும் அதிகாரம் செலுத்தும் அனைவருக்காகவும் மன்றாடும்படியும் நன்றி செலுத்தும்படியும் கூறுகின்றார்.

**'இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ'** *( 1தீமோ. 2:2)* இவ்வாறு செய்யுமாறு கூறுகிறார்.

செல்வந்த நாடுகள், தம்மால் கூடுமான வரை பாதுகாப்புத் தேடும் அயல் நாட்டவரை வரவேற்று, அவர் தமது சொந்த நாட்டில் பெறமுடியாத பாதுகாப்பையும் வாழ்க்கைத் தொழிலையும் பெற உதவவேண்டும். விருந்தினரை வரவேற்பவர் அவருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற இயற்கை உரிமையை அரச அதிகாரிகள் மதிக்கவேண்டும்.

அரசியல் தலைவர்கள் பொதுநலனுக்குப் பொறுப்பானவர்களாய் இருப்பதால், பல்வேறு சட்டமுறைகளுக்கு, குறிப்பாக குடியேறுபவர் தனதாக ஏற்கும் புதிய நாட்டைப் பொறுத்தமட்டில் அவருக்குள்ள கடமைகளுக்கமைய குடியேறும் உரிமையை செயற்படுத்தலாம். குடியேறுவோர் தம்மை ஏற்றுக்கொண்டுள்ள நாட்டின் உலகுசார்ந்த, ஆன்மீக பாரம்பரியங்களை நன்றியோடு மதித்து, அதன் சட்டங்களுக்கு அமைந்து, குடிமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதில் துணைபுரிதல் வேண்டும்.

அரச அதிகாரிகளின் ஆணை நேர்மையான ஒரு.மனச்சாட்சிக்கு மாறாக இருந்தால் அதற்குப்பணிய மறுப்பது, இறைவனுக்குப் பணிசெய்வதிலும் அரசியல் சமூகத்திற்குப் பணிசெய்வதிலும் உள்ள வேறுபாட்டின் காரணமாக நியாயமானதாகின்றது.

**'ஆகவே சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்'** *(மத். 22:21).*

**'மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்'** *( தி.பா. 5: 29).*

தனது வரம்பை மீறிச் செயற்படும் ஒரு அரச அதிகாரத்தின் அடக்குமுறையில் இருந்தாலும், குடிமக்கள் பொதுநன்மைக்காகத் தாம் செய்யவேண்டியவற்றை மறுத்தலாகாது. ஆயினும் இயற்கைச் சட்டத்தாலும் நற்செய்தியின் சட்டத்தாலும் வரையறுக்கப்பெற்ற எல்லைக்குள் தங்களுடைய உரிமைகளையும், தங்கள் உடன் குடிமக்களின் உரிமைகளையும் அவ்வதிகாரத்தின் துர்ப்பிரயோகத்திற்கு எதிராகப் பாதுகாக்க அவர்களுக்கு உரிமையுண்டு (GS74 5).

பின்வரும் அனைத்து நிபந்தனைகளும் இருந்தாலொழிய அரசியல் அதிகாரத்தின் அடக்குமுறையை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவது முறையாகாது.

☆ **நீண்டகாலமாக சில குறிப்பிட்ட அடிப்படை உரிமைகள் தொடர்ந்து கடுமையாக மீறப்பட்டமை.**

☆ **நிலைமையைச் சீராக்க மற்றெல்லா வழிவகைகளையும் கையாண்டு பார்த்தமை.**

☆ **இத்தகைய போராட்டம் இன்னும் மோசமான ஒழுங்கீனங்களைக் கொண்டுவராது.**

☆ **போராட்டம் வெற்றிபெறும் என்பதற்குப் போதிய ஆதாரம்.**

☆ **இதைவிடச் சிறந்த தீர்வு எதையும் காணமுடியும் என்ற சாத்தியக்கூறு அரிதாக இருத்தல்.**

## அரசியல் சமூகமும் திருச்சபையும்

ஒவ்வொரு நிறுவனமும் உள்ளடக்கமான விதத்தில் என்றாலும் மனிதனுடைய இலட்சியம், அவனது கதி ஆகியவற்றால் தூண்டப்படுகிறது. இதிலிருந்து அதன்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



பாதுகாவலன் [illegible]வது ஆண்டு நிறைவின்போது ஆயர்கள், மறைக்கோட்ட முதல்வர்கள் பத்திரிகை ஆசிரியர்களோடு செபவேளையில் எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலியூர்க்கோர் நற்கனி

நவாலியூர்க்கோர் நற்கனி - அது
நல்லாயன் சபை எனும் இறைகனி
நல்ல இறைவன் நல்ல மனிதரை
நம்மூரில் உருவாக்க நமக்காக
நாட்டிய நல்ல மரம்

கடந்த கால் நூற்றாண்டின்
கறைபடிந்த காலங்களில்
கால் பதித்த மண்ணின் மாந்தர்களை
கடவுள் வழி மேய்த்தெடுக்க வந்த
நல்லாயன் சகோதரிகளின் அருட்சபை

கடந்தைந்தாண்டுகள் - யாழ். மண்ணில்
உறவுகள் கைவிட்ட காலம்
உயிரை விடப்போம் நேரங்கள்
முதியோரை கைவிட்ட கணப்பொழுதுகள்
ஆயன் அறிவான் மந்தைகளை
அறிந்தனர் அருட்சகோதரிகள் மாந்தர்களை
அலைந்தனர் சேர்ந்தனர் ஆயர் இல்லத்தில்

நாவாந்துறையிலே நல்லாயன் சபை - அதில்
நல்ல தலைவிதான் எங்கள் அசுந்தா மெரியா
இளையோர்க்கு உத்தரவாதமானார்
பயச்சூழலிலும் பாதுகாத்தார்
கல்வியில் படிக்கட்டானார்
வறியவர்களுக்கு உணவளித்தார்
குழந்தைகளுக்கு பாட்டி ஆனார். - எனினும்
எல்லோர்க்கும் அதிர்ச்சியுமானார்
நாவாய் மண் அழுதது - அன்னையின்
மாற்றமாகும் செய்தி கேட்டு

பெ.இ. அமலநாயகம்
நாவாந்துறை

## என் யேசுவே

வாழ்க்கைப் போராட்டத்தில்
என் நிம்மதியைத் தொலைத்தபோது
என் அமைதியானாய் !

கோபத்தின் பிடியில் சிக்கி
நான் ஆவேசம் கொண்டபோது
என் சாந்தமானாய் !

பாவத்தின் மத்தியில்
நான் வாழ்ந்தபோது
என் மன்னிப்பானாய் !

வேதனையில் மனம் சோர்ந்து
என்னேயே நான் இழந்தபோது!
என் சக்தியானாய் !

என் உடன் பிறப்பொன்று
தன்னை மாய்த்துக்கொண்டபோது
நான் நினைவிழந்து தவித்தபோது
என் ஞாபகமானாய் !

நணபர் கூட்டம்
கயவர் கூட்டமானபோது
என் அன்பானாய் !

என் தாயை நான் நினைத்து
நான் தனிமையில் அழுதபோது
என் ஆறுதலானாய் !

அனல் வெய்யிலில்
நான் நடந்தபோது
என் குளிர்நிலவானாய் !

என்னை நேசித்தவர்கள்
என்னை சிநேகிக்க மறுத்து
என்னை ஓரம் கட்டியபோது
என் நேசனானாய்!

அந்நியரின் மண்ணில்
நான் திசைமாறியபோது
என் வழிகாட்டியானாய் !

உன்னை ஷஷஇறைமகன்,, என்று
ஏற்க மறுத்தவர்கள் மத்தியில்
நான் அச்சப்பட்டு வாழ்ந்தபோது
என் திடமானாய் !

என் வாழ்வில்
என் கடவுளும்
என் நண்பனும்
என் உயிர்த்தோழனுமானவனே!
என் யேசுவே ! உன் பாதத்தில் நான்
சரணடைகின்றேன்.

உடுவில் S.A. ரவிஷங்கர்
சவுதி அரேபியா

## 'அ'கர வரிசையில் பாவம் பாரீர் பாவங்கள் பாரினில் பலுகியதே

அன்னை தந்தையரை அவமதிப்பவர்கள்
ஆசிரியர் குருவைப் புறக்கணிப்பவர்கள்
இல்லாதோரை இழிவாக எண்ணுபவர்கள்
ஈகை செய்பவரைக் கேலி பண்ணுபவர்
உலகின் இன்பமே உண்மை என்பவர்கள்
ஊராய் நடுவே போலியாய் வாழ்பவர்கள்
எடுத்த எடுப்பிலே அடுத்தவனை வெறுப்பவர்கள்
ஏமாளி பலபேரை ஏமாற்றி நினைப்பவர்கள்
ஐயுற வாழ்ந்து அமைதியின்றி அலைபவர்கள்
ஒற்றுமையைத் தகர்த்தெறிய புதைகுழி தோண்டுபவர்கள்
ஓய்வு ஒழிவின்றி அயலவன் குறை சொல்பவர்கள்
ஔவியம் பேசி அவனியிலே வாழ்பவர்கள்.

தவம் குருகூமுத்து
நவாலி

## உயிர்ப்பு நாளில் அமைதி

ஒளியாம் இறைவன் தனது
அழியாத இறையரசினை பரப்பிட
வானுலகைத் துறந்து விட்டு
மண்ணுலகை தமதாக்கினார்
புரிந்து கொள்ளாத யூதரும்
புரிசேயரும் இறைமகனை
வுலுவான துன்பங்களைக் கொடுத்து
சிலுவை தனில் அறைந்து
கொன்றனர்
அன்றைய சிலுவைக் கொடூரங்கள்
இன்றுமே இங்கு நிகழ்கின்றன
இடி போன்ற முழக்கங்களும்
வெடி ஓசைகளுமே ஓங்கி
காற்றோடு கலந்து – நாளும்
நாற்றாக வளர்ந்து நீடிக்குதே
குருதிகள் சிந்தி இளம் உள்ளங்கள்
கருகிப் போவது நியாயமா?
கிறிஸ்துவின் உயிர்ப்பு நாளில்
நெறி தவறாமல் க்ணணோக்கும்
பெரு நாளான இன்று எம்
நிலையுணர்ந்து
திருவாழ் மைந்தனே நீடித்த
நீதியான அமைதியை எமக்கு
சதிகள் எதுவுமின்றித் தாருமையா!

ஆ.சான் பெனற்
(இளவாலை)
வவுனிக்குளம்

## நீ உயிர்த்திடு

சாவை நீ தேடுகிறாயா
உன்னை சாவு தேடுகிறதா
இரண்டிற்கும் இதுவரை பதிலில்லை
பதில் கிடையாதென்பது
என் நம்பிக்கை

ஆனால்!
ஒன்றுமட்டும் நிச்சயம்
நீ சாவாய்
நானும் சாவேன்

உனக்கும் எனக்கும்
தெரிந்த உண்மை
சாவு!
உலகமே புரிந்த உண்மை
சாவு!

ஆனால்!
எவரும் இதனை
பொருட்படுத்தியதாக
தெரியவில்லையே

சொத்துக்களை குவிக்கிறாய்
சொந்த பந்தங்களை பிரிக்கிறாய்
பகையினை சம்பாதிக்கிறாய்
பதவிகளுக்காய் மாளுகின்றாய்

தாயை ஏமாற்றுகின்றாய்
தந்தைக்கு நடிக்கிறாய்
மனைவியை துன்புறுத்துகிறாய்
கணவனை எதிர்க்கிறாய்

குடி உனது தொடர்கதை
காமவெறிகள் உன் சிறுகதைகள்
உள்வாயிலே அகம்பாவக் கவிதைகள்
முற்று முழுதாக உள்வாழ்வு
ஓர் அசிங்க நாவல்

சூகப்போகும் மனிதனே
சேத்து உயிர்த்த யேசுவுக்கு
விழாவெடுக்கப் போகிறாயோ
நில்! சோல்வதைக்கேள்
முதலில் நீ
உன் அழுகிய வாழ்விலிருந்து
செத்து உயிர்த்திடு

அதுவே உனது
உயிர்ப்பு ஞாயிறு

சகோ. ஜியல் அமதி
கண்டி

## தவக்காலம் உதவும்காலம்

பாவங்களுக்காக பரமனிடம்
பிராத்தனை செய்யும் காலம்
எமது சிலுவைகளையும் சுமந்து
எம் ஆண்டவர் பாடுபட்டார்
அந்த நினைவுகளில் நிஜமே
இந்த தவக்காலம்.

எனவே இத்தவக்காலத்தில் – நாம்
ஏழைகளிற்கு உதவவேண்டும்
தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு
தவிக்கும் இதயங்களிற்கு
ஆறுதல் வார்த்தைகள் கூறி
அன்பு செய்யவேண்டும்
பாதைகளில் கால்களை மட்டுமல்ல
இதயங்களையும் எடுத்துவைப்போம்
இறை பிறர் அன்பு கொண்டு
மறைவாழ்வில் பயணிப்போம்
சிலுவைப் பாதையினில் – எம்
சிந்தையைச் செலுத்திடுவோம்

போரின் அனர்த்தம் நீங்கி
பாரில் சமாதானத்தை வரவேற்போம்
கறைபடிந்த இதயக்கல்லறைகளை
இறைவழிக்குப் புதுப்பிப்போம்
பாவங்களை விட்டுவிட்டு – அவர்
பாரச் சுமையை இறக்கிடுவோம்

ஜோ. ஜெஸ்ரின்

## பாலகன் இயேசு

பாலரெங்கள் நேசரான பாலகன் யேசு
பாசமோடு எம்மைத் தாங்கும் ராசாதிராசன்
வாசமலர் வீசுபுகழ்த் தேசமெங்கும்
வாழ அன்பின் நாதர் கீதம் நாளும் பாடுவோம்

ஏழைமக்கள் தோழனாகப் பூவில் வந்தவர்
இருளில் தூய ஒளியையேற்றி அருளைத் தந்தவர்
வாழ்விலாத புறக்கணிப்பில் வாடி நொந்தவர்
வளம் மிகுந்து உளம்மகிழ்ந்து வளர வைத்தவர்

சின்னஞ்சிறு மலர்களெம்மை அழைத்தணைத்தவர்
சிந்தைகூர மைந்தராகச் சேர்த்திணைத்தவர்
அன்னையாகத் தந்தையாக அன்பு காட்டியே
அளவிலாத தியாகியாகி எம்மை மீட்டவர்

## பாலகனே வந்தருள்வீர்!

மார்கழியின் மழையினிலே
மாதாவின் மடியினிலே
மாசுள்ள இவ்வுலகில்
பாவந்தனை அழித்திடவே
பாலகனே வந்தருள்வீர்

ஏழ்மைதனை எடுத்துரைக்க
குடில்தனில் எமக்காக
குழந்தையாய் பிறந்தவரே
இவ்வுலக மக்கள்செய்யும்
பாவந்தன்னை மன்னித்து
இரட்சிப்பைத் தந்திடுவீர்

சிவராசா சுதன்
பரி. யோவான்
யாழ்ப்பாணம்

## மனிதனின் வாழ்வை முழுமையாக்குவது தொழில்

அருள்திரு போல் நட்சத்திரம் அமதி

மனிதவாழ்வு மாண்பு அடையும்போது நிறைவுபெற்று தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்கும் மனித மாண்பையும், தொழில் மாண்பையும் பேணி வாழும் போது நிறைவு கொடுக்கும் கருவிகளாக நாம் இருப்போம்.

இவ்வாறு கோப்பாய் புனித சூசையப்பர் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற பெருவிழாத் திருப்பலியில் தலைமை ஏற்று திருப்பொழிவாற்றிய போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளார் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தமதுரையில் 3 முக்கிய சிந்தனைகளை முன் வைத்தார்.

* தொழில் மாண்பு பேணப்பட வேண்டும்.

* மனிதனின் மாண்பு பேணப்பட வேண்டும்.

* மற்றவர் அமைதியின் மாண்பு பேணப்பட வேண்டும்.

உலகம் முழுவதும் தொழிலாளர் தம் உரிமைக்காகப் போராடுகின்றனர். மனிதனைப் படைத்தபோதே உலகைப் புனிதப்படுத்தி மனிதவாழ்வு மாண்புபெற தொழில் செய்யுமாறு பணித்த இறைவனைப் பின்தொடர்ந்த புனித சூசை எமக்கு முன்மாதிரி காட்டியுள்ளார். எத்தொழிலைச் செய்தாலும் அதனை மதிப்பதன் மூலம் கடவுளை மகிமைப்படுத்துங்கள். வறுமையும் ஏகாதிபத்தியமும் போரும் போட்டியுமான உலகில் தன் வாழ்வை மாண்புள்ளதாக பயன்படுத்துபவனால் மட்டும் மற்றவர் வாழ்வை மாண்புள்ளதாக்க முடியும். மனிதமாண்பு தணிக்கப்பட்டு தெய்வீகச்சாயல் சின்னாபின்னமாகியுள்ள எம் வாழ்வைச் சீர்ப்படுத்த இன்றைய விழா அழைக்கிறது.

ஆன்மீக வாழ்வில் அமைதியுடன் வாழும்போது அயலவர் அமைதி பேணும் கருவியாக நாம் திகழமுடியும். எம் உணர்வுகள் சிந்தனைகளில் நீதியோடு மனிதம் பேணும்போது அன்பையும் அமைதியையும் கொடுக்கும் கருவிகளாக நாம் வாழமுடியும்.

கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிய புனிதர் பெருவிழா நவநாள் வழிபாடுகள் இறையருளால் உளமாற்றம் பெற்று அன்பு வாழ்வு வாழ அருள்தந்தையர்கள் பொன்சியன் அ.ம.தி, அன்புராசா அ.ம.தி, லோறன்ஸ், ஜெயந்தன் அ.ம.தி ஆகியோர் திருவுரைகளால் ஆன்மீக வழி காட்டினர்.

எமது பங்குத்தந்தை பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி அடிகளாரின் அயராத முயற்சியாலும் பங்குமக்களின் ஒத்துழைப்பாலும் புனிதர் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

**"நீதிமானாகிய புனிதர் வழி சென்றே மனித மாண்பு பேணும் கருவிகளாவோம்"**

*எஸ்.ஜி. றூபவசந்தினி*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத மறைவு – எமக்கோர் பெரும் இழப்பு

எங்கும் கிளை விட்டுப் பரவிய விருட்சமான திருக்குடும்ப சபை அப்போஸ்தலிக்க, காட்சித்தியான, திருமட சார்பற்ற, பொதுநிலையினரான துணை அங்கத்தினர், குருக்களை உள்ளடக்கி அகிலமும் பரந்த நமது சபை. 1981– 1993 வரை 12 ஆண்டுகளாக சபையின் பொது ஆலோசகர்களுள் ஒருவராகப் பணியாற்றி, தொடர்ந்தும் 1993ம் ஆண்டில் சபைத் தலைவியாகத் தெரியப்பட்டு முன்னைய 6 வருடங்களையும் முடித்து இரண்டாம் முறையாகவும் சபைத் தலைவியாகத் தெரியப்பட்டு அதிலும் ஈராண்டுகளை ஆனி 24ல் பூர்த்தியாக்கிவிட்டவர்தான் எம் பாசத்துக்கும் நேசத்துக்கும் உரித்தான மகிழ்வே உருவான மனித நேயம் கொண்ட சோதரி ஜோய்.

தென் ஆபிரிக்காவில் – கிம்பெனி எனுமிடத்தில் 1943ம் ஆண்டு செப்டம்பர் 25ல் குடும்பத்தின் மூத்த புதல்வியாகப் பிறந்தவளுக்கு ஒரேயொரு சகோதரி. அவள் பெயர் மொறீன். எம் நிறுவுனர் பியர் பியன்வெனு நோஆய் குடும்பத்தில் 1962ல் இணைந்து இரு ஆண்டின் பின் தன் முதல் அர்ப்பணத்தை முடித்தார். ஆசிரியப் பணி, ஆன்மீக வழிகாட்டும் பணி, மாகாணத்தலைவி, சபையின் பொது ஆலோசகர், சபைத் தலைவி என்னும் பணிகளில் 1964–2001 வரை 37 ஆண்டுகளை மனிதநேயம், மகிழ்வு, கையளிப்பு, உறவு எனும் புனித நற்பண்புகளுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அனைவரது அன்பையும், ஆதரவையும் பெற்று அனைவர் இதயத்திலும் நீங்காத இடம்பெற்ற இனிய சோதரியை எப்படி மறப்பது? தொடர்பு கொள்வோரைத் தொடக்கூடிய இனிய உரையாடல்கள்– அதுவும் எங்கெங்கு சென்றாலும் அந்தந்த மொழிகளில் சில நடைமுறைச் சொற்கள் – வசனங்களைத் தனதாக்கி இலகுவில் தன்னை அந்தந்த நாட்டுச் சகோதரிகள் மக்களுடன் இணைத்துக் கொள்ளும் உயர்ந்த பண்பு, அவளுக்கு எவரும் அந்நியர் அல்லர், உள்ளத்தை ஊடுருவும் கூரிய பார்வை, சகோதரிகள் உள்ளத்தில் இடம்பெறுபவற்றைக் குறிப்பால் அறிந்து குணம் கண்டுபிடிக்கும் கூரிய புத்தி, உள்ளத்தைத் தொடும் சல்லாபங்கள், உறவுகளை வளர்க்கும் உரிய முறைகளைக் கையாளும் யுக்தி.

இறைசித்தத்தை ஏற்க வேண்டி 1999ம் ஆண்டு பொதுச் சங்கத் தெரிவில் தன் சுகக் குறைவுடனும இரண்டாம் முறையாகப் பணியை மகிழ்வுடன் ஏற்று தன் குழுவுடன் இணைந்து ஈராண்டு நிறைவைக் கண்ட மறுநாள் ஜூன் 25ல் மூளையில் உள்ள வளர்ச்சிக்காகச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். வைத்தியர்கள் கூற்றுப்படி அச் சிகிச்சை நன்கு நிறைவேறியது. ஆனால் சில மணி நேர இடைவெளியில் மூளையில் ஏற்பட்ட குருதிப்பெருக்கு மீண்டுமோர் சத்திர சிகிச்சையைச் செய்ய வைத்தது. அத்துடன் அறிவு நிலையிழந்தாள் எம் சகோதரி.

தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டு ஒரு ஆட்டைத் தேடும் (லூாக்.15:40) பின் தொடரும் இயேசுவின் பண்பு அன்பின் பிரிக்கமுடியாத அம்சம் எனக் கூறியது மட்டுமல்ல. இயேசுவால் பின்தொடரப்படுவதன் மகிழ்ச்சி, எமக்காக இயேசுவிடமுள்ள ஆர்வம், எம் பாவங்கள் பிழைகளை இலகுவில் இல்லாதொழிக்குமென்றும் உறுதிமொழி கூறினார். எமது பாதுகாப்பு தெய்வீக அன்பின் அத்திவாரத்திலேயே தங்கியுள்ளது. இயேசுவின் பிரமாணிக்கத்துடன் இது ஒப்பிட முடியாதது கடைசியாக நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் இறைவன் மன்னிப்பும், மகிழ்ச்சியும் தரும் அன்புடன் எம்மைத் தொடர்ந்து வருகிறார் என்று தன் உள்ளத்தில் எதனை ஆணித்தரமாக நம்பி வாழ்ந்தாரோ அதனை எம் வாழ்க்கைச் சட்டமாக – தன் மரண சாதன மடலினால் அழுத்திவிட்டாள் எம் சகோதரி இம்மடலை எழுதியபோது தன் உள்ளுணர்வில் நிச்சயமாக இதை எமக்கு இறுதி அறிவுரையாகவும், அன்பு வார்த்தையாகவும் எழுதியதை நாம் உணர்கின்றோம். இச் செய்தி அவர் எமக்குவிட்டுச் சென்ற இறுதி யாத்திரையின் அன்பு மொழிகள். எம் வாழ்க்கை நெறிகள் இறையன்பை வெளிப்படுத்தும் மேற்படி நற்செய்தியானது எமது அன்பின் தன்மை எவ்வாறிருக்க வேண்டுமென்பதையும் எமக்குக் காட்டுகின்றது. மன்னிப்புடன் மற்றவர்களைத் தொடரும்போது அவர்கள் இதயத்தில் குணப்படுத்தலை அளிக்கின்றோம். எமக்கு இறைவன் செய்வதை நாம் பிறருக்குச் செய்கின்றோம். குணமாக்கலை வழங்கும் எம் இதய மன்னிப்பானது எம் இதயத்தில் அமைதியை உண்டு பண்ணுகிறது. மற்றவர் மட்டில் தொடர்பான அன்பை வழங்கலைப் பயிற்சித்து இறை இயேசுவைப் பின்பற்றவும் எமக்காகச் சகோதரி அருளை இரந்து கேடகிறார் தன் இறுதி மடலில். இறுதி வரை இறையன்பை உணர்ந்தும், அனுபவித்தும் வாழ்ந்தும் வந்த எம் சகோதரி.

ஜோய் ஒரு தனித்துவமான தலைவி சபையின் வளர்ச்சி, வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்தவர். அவரின் விசுவாச வாழ்வு, இறைவார்த்தை மட்டில் அவரது பிரமாணிக்கம், உயிரூட்டமளிக்கும் உறவுகள், தொடர்புகள், மனித நேயத்துடன் கூடிய காந்த சக்தி, தெளிவான, கூர்மையான அட்டாவதானம், பியர் பியன்வெனு குடும்பத்தின் மட்டிலுள்ள கரிசனை, பாசம், போரினாலும் இடப்பெயர்வினாலும் வாடிய எம்மேல் காட்டிய பரிவு, தேவைகளை நிவர்த்திசெய்ய எடுத்த முயற்சிகள், பல் வகையிலும் உடனுக்குடன் கொண்ட தொடர்புகள் தைரியமூட்டும் வார்த்தைகள், அவர்கள் பணி மூலம் பெறத்தந்த மகிழ்வு, உந்துதல்கள் இவற்றை என்றும் மறக்க முடியாது. என் 6 வருட இக்கட்டான பணி வாழ்வில் இறைவனால் அளிக்கப்பட்ட ஒரு கொடை.

அவர்களின் எதிர்பாராத மறைவு அவ குடும்பத்துக்கு மட்டுமல்ல எம் திருக்குடும்ப சபை முழுவதிலும் ஓர் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது. உயிருடன் இருந்த போது உம்மை நேசித்தோம். உம் பிரிவிலும் உம்மை மறவோம். உம் உடல் பிரிந்தாலும் உறவு என்றும் எம் உள்ளங்களில் நிலைத்திருக்கும். உம் புன்னகையுடன் கூடிய பொலிந்த முகம், எம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது. ''செவி மடுக்கும் இதயமென்னும் மண்ணில் தான் அன்பு பண்பு வேர் விடும்'' என்று நவம்பர் 2000ம் ஆண்டு எழுதிய மடலின் உட்பொருளை இறைவனுக்கும் அவர் எம்மிடம் கேட்பவற்றுக்கும் செவிமடுத்தல் மூலம் பதிலிறுப்பதனால் உங்கள் ஆன்ம விருப்பத்தை நாம் பூர்த்தி செய்வோம். உங்கள் ஆன்மா சாந்தி பெற இதனை நாம் எம் வாழ்வாக்க முயல்வோம் என வாக்குப் பண்ணுகின்றோம். இறைபதம் நின்று எம்மவர்க்காய்ப் பரிந்து பேசுவீரென நம்புகின்றோம். உங்கள் ஆன்மா இறைவனில் சாந்தி கொள்வதாக. உங்களை நினைக்கும் போதும், இறைவனுக்கு நன்றி கூறும் போதும் மகிழ்வுடன் நன்றி கூறுவோம். விண்ணக வாழ்வில் உங்கள் பெயருக்கேற்ப மகிழ்ந்திருக்க எம் செபங்களை அர்ப்பணமாக்குகின்றோம்.

*அருட்சகோதரி மோரி சோபியா (தி.கு)*

# 2001 க.பொ.த. (சா.த.) பரீட்சை கிறீஸ்தவம் (றோ.க.) வினாப் பத்திரம்

இப் பரீட்சைக்கு 9,10,11ம் வருடங்கள் உள்ளடக்கப்பட்ட பழைய பாடத்திட்டத்தையும், 10ம், 11ம் வருடங்கள் உள்ளடக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தையும் செய்கின்ற பரீட்சார்த்திகள் உள்ளமையால், இவ்வருடம் மார்கழி மாதம் க.பொ.த (சா.த) பரீட்சை பத்திரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எல்லா பரீட்சார்த்திகளுக்கும் ஒரே வினாப் பத்திரம் அளிக்கப்படும். ஆகவே, கீழ்க்காணும் காரணங்களை பரீட்சை செய்பவர்கள் கவனத்தில் எடுக்கவும்.

1ம் பகுதி (1 மணித்தியாலம்)

1) தேர்ந்தெடுத்து புள்ளி இடும் வினாக்கள் 40 உண்டு. இந்த வினாக்களுக்கு எல்லாப் பரீட்சார்த்திகளும் பதில் அளிக்க வேண்டும். இரு பாடத்திட்டத்திற்கும் இணைய பொதுவானதாக இந்த வினாத்தாள் அமைக்கப்பட்டுள்ளது.

1ம் பகுதி (2 மணித்தியாலம்)

1) இது மூன்று பகுதிகளாக உள்ளன. பரீட்சார்த்தி ஐந்து வினாக்களுக்கு விடை அளிக்கவேண்டும்.

2) 1ம் பகுதியில் 5 வினாக்கள் உள்ளன. இது புதிய பழைய பாடத்திட்டங்கள் இரண்டிற்கும் இணைய அமைக்கப்பட்டுள்ள வினாக்களாகும். எல்லா பரீட்சார்த்திகளும் இதற்குப் பதில் அளிக்கவேண்டும். இதில் 3 வினாக்கள் மட்டுமே தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

3) இரண்டாம் பகுதி புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப 4 வினாக்கள் உள்ளன. அதில் பரீட்சார்த்திகள் 2 வினாக்களைத் தெரிந்தெடுத்து பதில் அளிக்க வேண்டும். 2ம் பகுதியைத் தேர்ந்தெடுப்போர் 3ம் பகுதியைத் தெரிந்தெடுக்க முடியாது.

4) மூன்றாம் பகுதி பழைய பாடத்திட்டத்திற்கு ஏற்ப 4 வினாக்கள் உள்ளன. அதில் பரீட்சார்த்திகள் 2 வினாக்களைத் தெரிந்தெடுத்து பதில் அளிக்கவேண்டும். 3ம் பகுதியை தேர்ந்தெடுப்போர் 2ம் பகுதியை தெரிந்தெடுக்க முடியாது.

1ம் பகுதியில் 3 வினாக்களும், 2ம் அல்லது 3ம் பகுதியில் 2 வினாக்களுக்கும் பதில் அளிக்கவேண்டும் என தேசிய மறைக்கல்வி இயக்குநர் அருள் தந்தை சிறில் எஸ். பெரேரா அறிவித்துள்ளார்.

# நாடகப் போட்டி முடிவுகள்

கரிதாஸ்– செடேக் அனுசரணையுடன் யாழ். கியூடெக் நிறுவனம் நடாத்திய ''புதிய உதயம்'' நாடகப் போட்டி முடிவுகள்

சமாதானத்தைக் கருப்பொருளாகக் கொண்டு யாழ். மாவட்ட பாடசாலை மட்டத்திற்கிடையே நடாத்தப்பட்ட நாடகப் போட்டி முடிவுகள் முதலாவது பரிசு பெறும் நாடகம் - ''இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை'', தேவரையாளி இந்துக் கல்லூரி, வதிரி கரவெட்டி இரண்டாவது வது பரிசினைப் பெறும் இரண்டு நாடகங்கள் - ''விடியலை நோக்கி'' அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், வல்வெட்டித்துறை ''புதிய உதயம் நோக்கி'', சென் அன்ரனிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை, பாராட்டுப் பரிசினைப் பெறும் நாடகங்கள், ''சரணாலயம்'', மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை, ''கானல் நீர்'', யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம், தேசிய மட்டப் போட்டிக்கு முதல் நாடகம் தெரிவாகியுள்ளது.

## நன்றி கூறல்

செபமாலைத்தாசர் சபையின் நிறுவுனர் வணக்கத்துக்குரிய தோமஸ் அடிகளாரின் பரிந்துரையூடாக நான் கேட்ட மன்றாட்டை வானகத் தந்தையாம் இறைவன் எமக்கு அளித்து அடிகளாரை மகிமைப்படுத்தியமைக்காக இறைவனைப் போற்றிப்புகழ்ந்து நன்றி கூறுகின்றோம்.

அடிகளாரை மேன்மேலும் மகிமைப்படுத்தி புனிதராகப் பகிரங்கப்படுத்தும்படி இறை தந்தையிடம் இறைஞ்சுகின்றோம்.

உமது அடியான்
[illegible]

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

### புதிய அனுமதி ~ 2002

விண்ணப்பப் படிவம் (பரீட்சைக்கட்டணம் உட்பட) 200/= ரூபா. 27.08.2001இல் இருந்து ஞாயிறு, பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப.9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரை, கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 27.09.2001ம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.

தாபல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1ஆம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1991ல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருக்க வேண்டும்.

ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் அதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அனுமதிப் பரீட்சை 02.10.2001 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். சமூகம் தரவேண்டிய நேரம் காலை 8.30 மணி

உப அதிபர்

## நீங்காத நினைவலைகளில் ஆண்டுகள் மூன்று



மலர்வு 10 - 10 - 1924

உதிர்வு 25 - 08 - 1998

ஆண்டுகள் அடுத்தடுத்து
மூன்றுகள் ஓடிடினும்
நீங்கிடாது உம் நினைவுகள் தந்தையே.
மீண்டும் நாம் காண்பது எப்போது?
விழி நீர் வற்றும் அப்போது.
இறை ஒளியில் எமக்காய்
நிதமும் அருள் வேண்டும் தந்தையே
மண்ணுலகம் உள்ளவரை
நீங்காது உம் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவுகளில்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

1/14 புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

01.09.2001

## யாழ். மறை...

(1ம் பக்க தொடர்ச்சி)

உள்ள பங்குகளில் அன்பியம் தொடங்கப்பட்டுள்ளதாயும், சில இடங்களில் உற்சாகமாகவும், நல்ல முறையிலும் தொடர்ந்து நடைபெறுவதாகவும், ஒரு சில பங்குகளில் இதற்கு இறைமக்கள் இன்னும் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் தொடர்ந்து அன்பியம் பற்றிய கருத்துக்கள் தெளிவாக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்கள்.

அருள்திரு றொகான் அன்பியத்தின் தொடர் பயிற்சிகளையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி எடுத்துரைத்தார். யாழ். மறைமாவட்டத் திற்கென தொடர் பயிற்சிகளை வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும், மாதாந்தம் அன்பிய ஊக்குவிப்பாளர் செயற்படுவதற்கான வழிகாட்டல் குறிப்புக்களை தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும், மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் அன்பிய ஊக்குவிப்பாளர் மறைக்கோட்ட ரீதியில் அடிக்கடி வெவ்வேறு பங்குகளில் அனைத்து ஊக்கவிப்பாளரும் சந்தித்து தங்களுடைய பங்குகளில் நடைபெறும் அன்பிய குழும வாழ்வு ஆரம்பிப்பதற்கு பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ் இக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை ஒழுங்குசெய்ததுடன் தொடர்ந்து மறைக்கோட்டங்களிலும், பங்குகளிலும் இவ் அன்பிய விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தவிருப்பதாகவும் அனைத்து இறைமக்களுடைய நல்மனதையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்து, கடந்த காலங்களில் அன்பிய ஊக்குவிப்பாளர் காட்டிய ஆர்வத்தையும், ஊக்கத்தையும் தொடர்ந்து காட்டவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## அல்பேனிய...

(1ம் பக்க தொடர்ச்சி)

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் ரயிகான் எனும் ஊரில் சதை வளர்ச்சியால் ஏற்பட்ட கட்டியினால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் அன்னை திரேசாவிடம் ஆசீர் பெற்றதால் அவரது கட்டி மறைந்து குணமடைந்து விட்டார் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வாழும் இன்னுமொரு பிரான்சியர் மோட்டார் வாகன விபத்தில் அவரது விலா எலும்புகள் பல உடைந்துவிட்டபோதும் அவரின் கழுத்தில் கட்டியிருந்த் அன்னை திரேசாவின் பதக்கத்தினால் புதுமையாகக் குணமடைந்திருப்பதாக அறிவித்திருக்கிறார். மூன்றாவதாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன யுவதி ஒருவர் தான் கண்ட கனவில் அன்னை திரேசா அவளை நோக்கி ''மகளே நீர் குணமடைந்து விட்டீர்'' என்று கூறிய பின்னர்தான் நோயிலிருந்து குணமடைந்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

அன்னை திரேசா புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கு இடம்பெற்ற விசாரணைகளில் அன்னையால் கல்கத்தாவில் நிறுவப்பட்ட அன்பின் பணியாளர் சபை (Missionaries of Charity) யிலுள்ள சகோதரிகள் பலரும் தம் சாட்சியங்களை வழங்கிப் பங்களித்துள்ளனர்.

# திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்றம்

# யாழ். ஆயரால் திறந்து வைப்பு



உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் கலைப் பணியாற்றிவரும் திருமறைக் கலாமன்றம் தனது வளர்ச்சிப் பாதையில் 05–08–2001 ஞாயிறு முதல் இன்னுமொரு பரிமாணத்தை தொட்டு நிற்கின்றது.

'கலா முற்றம்' என்ற பெயரில் புதியதொரு கலைக் கூடத்தை யாழ். இல.15 றக்கா வீதியில் திறந்துவைத்ததன் மூலம் இது சாத்தியமாகியது.

அன்றைய நாளில் மாலை 5.00 மணியளவில் இச் சிறப்புமிகு நிகழ்வு மன்ற இயக்குனர், திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞர்கள், அங்கத்தவர்கள் சூழ்ந்து நிற்க இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாக இறைஆசியுடன் கலாமுற்றத்தை திறந்து வைத்தார். அவருடன் கூடவே யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜே. பி.ஈ. செல்வராஜா அடிகளும் வருகை தந்திருந்தார்.

திறப்பு விழாவை தொடர்ந்து யாழ். ஆயர், குருமுதல்வர், மன்ற இயக்குனர், பொதுச்செயலாளர் ஆகியோர் உரையாற்றினார்கள். இதைத் தொடர்ந்து மன்றக் கலைஞர்களுக்கான மாதாந்த கலைஞர் ஒன்றுகூடல் இடம் பெற்றது இதன்போது புதிய கலைஞர் அறிமுகம், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் மன்ற மூதவை உறுப்பினர் கௌரவிப்பு இடம்பெற்றது. சிறப்பு நிகழ்வாக கடந்த ஜுலை 28ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 1ம் திகதி வரை தொடர்பகத்தில் இடம்பெற்ற அமெரிக்காவின் மஞ்சஸ்ரர் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜேம்ஸ் தொம்சனின் நாடகப் பட்டறையில் திருமறைக் கலாமன்றத்தின் சார்பாக கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வுகளைச் சிறப்பிக்க வருகை தந்திருந்த யாழ். பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி ம. தாட்சாயினி சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். இத்துடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

'கலாமுற்றம' திறந்துவைக்கப்பட்டதை சிறப்பிக்கும் முகமாக தொடர்ந்து ஒரு வாரகாலத்துக்கு திருமறைக் கலாமன்றத்தால் சிறப்பு நிகழ்வுகள் பல நடத்தப்பட்டன. இதன்போது கவிதை அனுபவம், வெளிநாட்டு கலைப் பயண அனுபவப் பகிர்வு, தலைமைத்துவ கருத்தரங்கு, பாரம்பரிய கலைகள் பயிலரங்கு ஆரம்ப வைபவம் அண்மைக் கால தமிழ்ச் சஞ்சிகைகள் ஒரு பார்வை என்பன இடம்பெற்றன.

# இறைவனின் அன்பை நினைவுகூருவதுதான் மரியாளின் விண்ணேற்பு விழா

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய திருவிழாத் திருப்பலியின்போது அருள்திரு ஜீவேந்திரா போல் (அ.ம.தி) தனது மறையுரையிரல் புனித கன்னி மரியாளின் விண்ணேற்பு பெருவிழாவின் போது எமது ஆலய பாதுகாவலியாக விளங்கும் பரலோக மாதாவிற்கு விழா எடுக்கின்றோம். இறைவன் கன்னி மரியாளுக்கு ஒரு திட்டத்தை வகுத்து வாழ்க்கையின் சவால்களையெல்லாம் மனவுறுதியோடு தாங்கவும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழவும், இறைசித்தத்தை நிறைவேற்ற சீடத்துவ வாழ்வுக்கும் அழைக்கப்பட்டாள். இவ்வாறே நானும் நீங்களும் அழிந்து போவதற்காகவல்லமாறாக நிறைவாழ்வைப் பெற நிலைவாழ்வை ஒன்றித்து அனுபவிக்க வேண்டுமென்பதற்காக இறைவன் என்னையும் உங்களையும் அழைத்திருக்கின்றார்.

எனவே இந்தத்தாய் மரியாள் எங்கள் எல்லோருக்கும் தாயாக இருக்கின்றாள். நாளை என்கின்ற எங்களுடைய கனவை நாங்கள் நிஜமாக்கவும் எங்களின் நல்ல கருத்துக்களை நிறைவேற்றுவதற்கும், நாளைய வாழ்க்கையை அனுகூலமாக நோக்கவும் இந்தத் தாய் கற்றுத் தருகின்றாள். இத்தகைய மன நிலையோடு இந்தத் தாய் மரியாளோடு அவளது பண்புகளைப் பின்பற்றி இறைவனை நோக்கி நாங்கள் பயணம் செய்வோம் எனத் தொடர்ந்து தமது மறையுரையில் கூறினார். திருவிழாத் திருப்பலியினைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் அளிக்கப்பட்டு திருவிழாத் திருப்பலி சிறப்புற அமைந்தது. இத் திருவிழாவிற்கு ஆயத்தமாக கடந்த நவநாட்களில் அருள்திரு **R.H** சகாயநாயகம் தனது ஆழ்ந்த கருத்துக்களினால் மறையுரையாற்றி மக்களை ஆயத்தம் செய்தார். இதற்கான ஒழுங்குகள் பங்குத்தந்தை பீற்றர் துரைரட்ணம் அடிகளார் ஒழுங்கு செய்தார்.

*லூா. மேசி சுஜந்தினி*



**கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது 20வது ஆயர் அபிஷேக தின நிகழ்வினில் குத்து விளக்கேற்றியபோது எடுக்கப்பட்ட படம்.**

## அகவொளியில் குடும்ப தின விழா 14.10.2001

குடும்பதின விழா அக்டோபர் மாதம் 14ம் திகதி கொண்டாடப்படும். இதற்கு ஆயத்தமாக கவிதை, கதை, கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்படும்.

இதன் விபரங்கள் பங்குத் தந்தையிடம் அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றது. தயவுசெய்து உங்கள் பங்குத்தந்தையாரிடம் தொடர்புகொண்டு உங்கள் ஆக்கங்களை செப்ரெம்பர் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் *'அகவொளி' 131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தரமான ஆக்கங்களுக்கு பாிசில்கள் வழங்கப்படும்

## தனிப்பட்ட...

(1ம் பக்க தொடர்ச்சி)

வரையப்படவேண்டும் என்பதை பேராயர் வலியுறுத்தினார்.

இந்த மகாநாடானது ''இன்றைய நெருக்கடியான சூழமைவில் தேசிய ஒப்புரவு'' எனும் கருப்பொருளில் மார்க்க நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டதாகும்.

## அன்பிய ஊக்குவிப்பாளர்க்கு கருத்தரங்கு

26.08.2001 அன்று பருத்தித்துறையில் நடைபெற்ற அன்பிய ஊக்குவிப்பாளருக்கான கருத்தரங்கு பருத்தித்துறை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த 95 அன்பியஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டனர். அருள்திரு றொகான் பல கருத்துக்களையும், விளக்கங்களையும் வழங்கினார். அன்பியம் எம் வாழ்வாக்கப்படல் வேண்டும். அன்பிய ஒன்றுகூடல் அன்பியத்தில் ஒரு பகுதி நிகழ்வு என்றும், இதன் மூலம் அன்பிய வாழ்வு குழுமங்களிலே வாழப்படல் வேண்டும் என்றார். குறுகிய நேரமாக இருந்தாலும் அவர் வழங்கிய கருத்துக்கள் நல்ல விளக்கமாகவும் தெளிவாகவும் அமைந்திருந்தது.

சாள்ஸ் அடிகளாரும் இதில் பங்குபற்றியிருந்தார். இக் கருத்தரங்கு பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அருள்தந்தை இருதயதாஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இறுதியில் திருப்பலியுடன் நிறைவுபெற்றது.

## விசுவாச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேறுபேற்றோர் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் என்ற யேசுவின் பொன்மொழியை மிகத் தெளிவாக்கி இன்று நம் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் இரத்தக் களரி தவிர்க்கப்பட்டு மக்கள் வறுமையினால், வன்செயல்களினால், அநீதியினால் துன்புறுவது நிறுத்தப்படத் திருச்சபை முன்னின்று குரல் கொடுக்கின்றது. இதனை எல்லா இனமும் உணர்ந்துவிட்டது. எல்லா மதங்களும் அன்பையும், சமாதானத்தையும் அமைதிக்கான வழிகளையும் காணத் துடிக்கின்றன. போரினால் இன்று தென்னிலங்கை மக்களும் பெரும் அழிவினையே காண்கின்ற நிலையில் எல்லா இதயங்களும் – சமய நம்பிக்கையை வளர்த்திட ஆவியின் செயற்பாட்டுக்கு நம்மை அர்ப்பணிப்போம். ஒப்புரவு மன்னிக்கும் மனப்பான்மையை – சமாதான வாய்ப்புக்களை வளர்த்து இறைமக்காளாகச் செயற்படுவோம். துன்பங்களூடாக இன்பமான அமைதியைக் காணவே கிறிஸ்து அழைப்பு விடுத்துள்ளார்.

புனித அன்னம்மாள் குடும்ப வாழ்வில் நிலைத்து இஸ்ராயேலின் மீட்புக்காகத் தம்மை அர்ப்பணித்து விசுவாச உறுதியினால் செப வாழ்வில் இறைவனைக்காணும் பேறுபெற்றார். நாமும் அமைதியின் தேவனைச் சந்திக்க அவரின் மாதிரிகையைப் பின்பற்றுவோம் என ஆசி வழங் கினார்.

*V.A. லெம்பேட்*

இப் பத்திரிகை பாதுகாவலன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2001ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197. T.P. No. 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org